8 பக்கம் விலை 0—2—0

JANASAKTHI
Phone 85777

இலங்கையில் 20 சதம்

மேற்கு வங்க சர்க்காரின் மிருக வெறி!

தோழர் கோஷ் கைது செய்யப்பட்டார்

கல்கத்தா, ஏப். 11-

மேற்கு வங்க - கம்யூனிஸ்ட் கட்சி தினசரியின் உதவி ஆசிரியர் தோழர் சைலேந்திர நாத் கோஷ் இன்று தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

ஜனசக்தி

கம்யூனிஸ்ட் கட்சி தின இதழ்
COMMUNIST TAMIL DAILY

ஏகாதிபத்திய நெருக்கடியின் விசித்திரத் தன்மை

லண்டன், ஏப்ரல். 11—

மார்ச் 17-ந் தேதியன்றைய கணக்குப்படி பிரிட்டனில் வேலையில்லாதவர் தொகை 4,33,000. பிப்ரவரி மாத மத்தியிலிருந்ததைவிட அதிகமாக 40 ஆயிரம் பேர் வேலை இழந்துள்ளனர்.

ஆனால் இதே நேரத்தில் 2 லட்சம் பேருக்கு வேலை காலியாக உள்ளதாம்.

மலர் 8 | சென்னை 12—4—'52 சனி ★ வெளியூர் 13—4—'52 ஞாயிறு | இதழ் 122

சட்டசபைக்கு உள்ளும் வெளியிலும் போராட்டம்

ஐக்ய முன்னணி திட்டத்தை அமுலாக்க ஒன்றுபட்டு போராடுவோம்

தோழர் ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி

நிருபர்கள் கேள்விகளும் பதில் விபரமும்

சென்னை, ஏப். 11—

மக்களின் தீர்ப்பை அலட்சியம் செய்து, ராஜாஜி மந்திரி சபையை அமைத்துள்ளார், ஆனால் மக்கள் தங்கள் விருப்பத்தை நிலைநிறுத்துவர் என நேற்று தோழர் ராமமூர்த்தி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறுகிறார்:

தோழர் பி. ராமமூர்த்தி எம். எல். ஏயும் சட்டசபை கம்யூனிஸ்ட் கட்சியின் உபதலைவர் எம். கல்யாணசுந்தரம் எம். எல். ஏயும் நேற்று பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசினர்.

அது சமயம் அவர்கள் பத்திரிகையாளர்களிடத்தில் அறிவித்ததாவது:

"மக்கள் தாங்களே, தமக்காக நடவடிக்கை மேற்கொள்வர், மக்களின் விருப்பமே வெற்றியடையும் என்பதை சரித்திரம் நிரூபிக்[illegible]. கம்யூனிஸ்ட் கட்சி இதர [illegible] ஜனநாயக சக்திகளுடனும் [illegible]பட்டு மக்களின் இப் பே[illegible]திற்கு, மக்களைப்பாதிக்கும் [illegible] அரசியல் பொருளாதாரப் பிரச்[illegible]னையிலும் சட்டசபைக்கு உள்ளும் வெளியும் தலைமை தாங்கி நடத்தும்.

"ஐக்கிய முன்னணியின் திட்டத்தை அமுல் நடத்தும் இப் போராட்டம் உச்ச கட்டத்தை எட்டும். அது இந்த சர்க்கார் கவிழ்வதில் கொண்டுபோய்விடும். முற்றிவரும் நெருக்கடியை தகர்ப்பதற்கான உடனடி கடமை ஒன்றைக் கூட இவ்வாட்சி பூர்த்தி செய்யப் போவதில்லை."

பின்னர் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தனர். ராஜாஜி கம்யூனிஸ்ட் கட்சியின்பால் ஒத்துழைப்பு மனோபாவத்தையே கொள்வேன் என கூறியதைக் குறிப்பிட்டுவிட்டு கம்யூனிஸ்ட் கட்சி மந்திரிசபையைப் பொறுத்து எக்கொள்கையை கடைப்பிடிக்கும் என ஒரு நிருபர் கேட்டார்.

"சர்க்காரைப் பொறுத்தவரை கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை தோழர் ராமமூர்த்தியின் அறிக்கையிலேயே தெளிவாகி உள்ளது.

"முதலாவதாக, இந்த மந்திரி சபை காங்கிரசுக் கெதிராக ஓட்டளித்த 65 சதவீத மக்களின் தீர்ப்புக் கெதிராக அமைக்கப்பட்டது."

"இரண்டாவதாக, மந்திரி சபையைப் பொறுத்த கட்சியின் கொள்கை மந்திரிசபையின் கொள்கையை வைத்தே முடிவு செய்யப்படும். ராஜாஜியின் இம் மந்திரி சபை என்ன செய்யும் என்பதை நாம் அறிவோம். மக்களின் குறைந்த பட்ச கோரிக்கைகளைக் கூட அது பூர்த்தி செய்யாது. ஏனெனில் மந்திரி சபை மக்களுக் கெதிரானவர்களைக் கொண்டே நிரப்பப்பட்டுள்ளது. இத்தகைய மந்திரி சபையுடன் ஒத்துழைப்பு எனும் பிரச்னையே எழவில்லை", என பதிலளித்தனர்.

மக்களைத் திரட்டுவோம்

உடனே கம்யூனிஸ்ட் கட்சி என்ன செய்ய விரும்புகிறது என ஒரு நிருபர் கேட்டதற்கு தோழர் ராமமூர்த்தி கூறியதாவது:—

"உடனடியாக மக்களை கட்சி ஒன்று திரட்டும். பொதுவான முறையில் மட்டுமல்லாமல் மக்களின் ஒவ்வொரு பிரச்னையிலும் அவர்களைத் திரட்டும். மக்களைத் திரட்டுவது என்பதற்கு, அடுத்த தேர்தல் 5 வருடங்களுக்கு பின் வரும்; அப்போது சர்க்காரை மாற்ற மக்களைத் திரட்டுவது என்பது பொருளல்ல.

"மக்களின் எழுச்சிக்கு சட்டசபையிலே பிரதிபலிப்புகள் இருக்கும். ராஜாஜி காங்கிரஸ் கட்சித் தலைவரான பின் கவர்னரால் பிரயோஜனகரமான பதவியுமளிக்கப்பட்டு மந்திரிசபை அமைக்கவும் அழைக்கப்பட்டார். இது அவருக்கு மந்திரி பதவியையும் இதர பல மாற்றுக வைத்து இதரர்களிடம் காங்கிரசுக்கு ஆதரவு தேட வாய்ப்பளித்தது. 10 நாட்கள் இதற்காக அவர் செலவிட்டார். இருந்தும் அவருக்குக் கிடைத்தது 3-ம் நெம்பர். இது எவ்வாறு? காங்கிரஸ் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதை எதிர்த்து மக்கள் அளித்த தீர்ப்பினாலேயே நிச்சயமாக இங்கிலை."

ஐ. மு. பலம் குறையுமென சிலர் எண்ணியது பகற் கனவே

ஐ. மு. தலைவர் பிரகாசம் அறிவிப்பு

காங்கிரஸ் மந்திரிசபை மக்களுக்கு விடுத்த சவால்

நாட்டிற்கு மிகவும் துரதிருஷ்டமானது

— பிர[illegible]

சென்னை, ஏப்ரல். [illegible]

"மக்கள் மீது ராஜாஜி [illegible]ந்திரி சபை திணிக்கப்ட[illegible] தானது மக்களுக்கு ஒரு [illegible]பரிய [illegible] ஐக்கிய முன்னணி தலைவர் பிரகாசம் ஒரு அ[illegible] கூறுகிறார்.

"சிலர் எதிர் பார்த்தபடி ஐக்கிய முன்னணியில் எவ்வித பலக் குறைவும் ஏற்படவில்லை என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுவதாக பிரகாசம் அவ்வறிக்கையில் கூறுகிறார்.

எதிர்த்துப் போராடுவோம்

"காங்கிரசை வெறுத்துத் தள்ளிய சென்னை மாகாண மக்கள் மீது காங்கிரஸ் மந்திரி சபை திணிக்கப்பட்டுள்ளது மிகவும் துரதிருஷ்டமான சம்பவமாகும்" என பிரகாசம் மேலும் கூறுகிறார்.

இப்படிப்பட்ட மந்திரிசபை அமைக்கப்பட்டுள்ளதால் இந்த சவாலை மக்கள் ஏற்று தங்கள் சுதந்திர போராட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டிய சிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஐ. மு.விலிருந்து பொதுநலக் கட்சி விலகவில்லை

"சிலர் எதிர்பார்த்தனர் இதனால் ஐ. மு.வில் ஒற்றுமை குலையுமென. அவ்வாறு நடக்கவில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் தங்களுக்குப் பதவிகள் வேண்டுமெனும் தற்காலிக ஆசையின் பேரில் ஏற்பட்டதல்ல இந்த ஒற்றுமை. ஒரு மனிதர் (மாணிக்கவேலு நாயக்கர்) மட்டும் காமன்வீல் தலைவர் என சொல்லிக்கொண்டு மந்திரியானார். அக்கட்சியின் இதர அங்கத்தினர்கள் அவரை ஒதுக்கிவிட்டு வேறு தலைவரை தேர்ந்தெடுத்த பின்னர்.

இதேபோல் உழைப்பாளி கட்சிக்கும் காங்கிரசுக்குமிடையில் சமரசம் செய்து வைக்க ஒருவர் முயன்றது தோல்வியிலேயே முடிந்தது. இது சம்பந்தமாக (9-ந் தேதியிட்ட) உழைப்பாளர் கட்சித் தலைவரின் கடிதம் எனக்கு இப்போதுதான் வந்து சேர்ந்துள்ளது. [illegible]பதில்[illegible]

ஸ்ரீகண்டன் பலஹீனமுற்றுள்ளார்

சர்க்கார் அலட்சியத்திற்கு கண்டனம் கிளம்பட்டும்

தோழர் எம். என். கோவிந்த நாயர் அறைகூவல்

திருவனந்தபுரம், ஏப். 11—

தோழர் ஸ்ரீகண்டன் நாயரின் உண்ணுவிரதத்தைப் பற்றி கவலைப்படாமல் திரு-கொச்சி சர்க்கார் நீடிக்கவிட்டிருப்பது "அக்கிரமமான அலட்சியமாகும்" என இன்று திரு-கொச்சி கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் தோழர் எம். என், கோவிந்தன் நாயர் எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்ட் - சோஷலிஸ்டுகளுக்கிடையில் தலைமைப் பதவிக்கான போட்டியே என தொழில் மந்திரி கூறியதைக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது: "சர்க்கார், பொறுப்பை இவ்வாறு தட்டிக் கழிக்கப் பார்க்கிறது. காங்கிரஸ் மேலிடம் உறுதியான கொள்கையை கடைபிடிக்குமாறு மந்திரிசபைக்கு குறிப்பனுப்பியதை இங்கு நினைவுபடுத்துகிறேன். ஸ்ரீ கண்டன் நாயர் உண்ணுவிரதத்தை நிறுத்துவதற்கான நிலைமையை சிருஷ்டிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில் அதன் விளைவுகள் மிகவும் அதிருப்திகரமானதே." என சர்க்காரை அவர் எச்சரித்தார்.

"எங்களுக்குள் ஒரு சில பிரச்னைகளில் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் நாட்டை ஒரு பெரும் பிரச்னை எதிர்நோக்கியபோது கூடிகின்றோம் இன்றும் ஒன்றுபட்டு நிற்கிறோம். இந்த உண்மையை மந்திரி பார்க்க மறுக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியின் பூரண ஆதரவு தோழர் ஸ்ரீ கண்டனின் உண்ணுவிரதத்திற்கு உண்டென உறுதி கூறுகிறேன்." எல்லா ஜனநாயக

(8-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவுக்கு சீன உணவு தானியம் அனுப்பும் பிரச்னையை மக்கள் குடியரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது

புதுடில்லி, ஏப். 11—

சீன மக்கள் சர்க்கார், இந்தியாவுக்கு உணவுப் பொருள் அனுப்பும் விஷயமாக பரிசீலனை நடத்தி வருகிறது. இத் தகவலை இந்தியாவில் உள்ள சீன ஸ்தானிகாலயத்தின் வர்த்தக அதிகாரி உவான்-சா-குன் அறிவித்தார். அவர் எழுத்து மூலம் அளித்துள்ள அறிக்கையில் கூறியதாவது:

"இந்தியாவுக்கு சீன உணவுப் பொருள் சப்ளை குறித்து எண்ணிறந்த செய்திகள் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. பல நிருபர்கள் இதுபற்றி விசாரித்தறிய ஸ்தானிகாலயத்திற்கும் வந்தவண்ணமுள்ளனர். இந்தியாவுக்கு உணவு பொருள்களை அனுப்பும் பிரச்னையை எங்கள் சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறது என்பதை பூர்வாங்கமாக மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்."

அறிவிப்பு

நாளை (13—4—52) தமிழ் வருடப் பிறப்பை முன்னிட்டு நமது காரியாலயத்திற்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. எனவே சென்னை 13—4—52; வெளியூர் 14—4—52 தேதிய பத்திரிகை வெளிவராது.

ஆசிரியர் குழாம்.

உலகில் இதுவரை தயாரிக்கப்பட்ட சினிமாவில் சிறந்தது

ரஷ்ய படம் "போர்க்கப்பல் போடம்கின்"

அக்டோபர் புரட்சியை பின்னணியாக கொண்டது

ப்ரஸ்ஸல்ஸ், ஏப். 10—

ரஷ்ய டைரக்டர் செர்ஜி மிக்கைலோவிச் ஐஸென்ஸ்டீன் தயாரித்துள்ள "போர்க்கப்பல் போடம்கின்" எனும் ரஷ்ய படம் உலகில் இதுவரை தயாரிக்கப்பட்டவைகளிலேயே சிறந்தது என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இங்கு நடைபெற்ற சர்வதேச சினிமா விழாவில் நடத்தப் பட்ட தேர்தலில் தான் இப்படம் சிறந்ததென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாந்தரமானதாக, சார்லி சாப்ளினின் "கோல்ட் ரஷ்," விட்டாரியோ டி சிகாவின் "சைகிள் திருடன்" (இத்தாலிய படம் சென்னையில் சர்வதேச சினிமா விழாவின் போது பம்பாயில் காட்டப்படுகிறது), ஆகிய படங்களும் இவற்றை யடுத்து சாப்ளினின் "நகர விளக்குகள்' ரெனுயரின் 'லே கிராண்ட் இல்யூஷன்" (பிரஞ்சு), ரெனே இனேரின் "லே மில்லியன்" ஆகிய படங்களும் சிறந்தவை என தேர்வு கண்டுள்ளன.

இத் தேர்தலுக்கு பெல்ஜியம் சினியா, லளித கலைவிழாவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

"போர்க் கப்பல் போடம்கின் படத்தின் திரைக்கதை சரித்திர முக்கியத்வமுள்ள அக்டோபர் புரட்சியை நிலைக்களமாக கொண்டது. புரட்சிக் காட்சிகள் பல இதில் உள்ளன.

அமெரிக்க-பிரிட்டிஷ் வெறியர்களின் வாஷிங்டன் மகாநாடு

(டாஸ் செய்தி)

சமீபத்தில் வாஷிங்டனில் அமெரிக்க-பிரஞ்சு ராணுவத் தலைமைக் குழுவின் தலைவர்களின் மகாநாடு நடைபெற்றது. தளபதி பிராட்லி பீல்ட் மார்ஷல் ஸிலிம், தளபதி ஜோவன் மூவரும் சந்தித்தனர். மகாநாடு ரகசியமாக நடைபெற்றது. சதிகாரர்களைப்போல் மூடின அறைகளில் திட்டங்கள் தீட்டினர். வெளிக்கு "தென் கிழக்கு ஆசியாவைப் பாதுகாக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்தோம்" என்று மட்டும் சொன்னார்கள்.

ஆனால் இம் மகாநாடு உண்மையில் "பாதுகாப்பை பலப்படுத்துவதைப் பற்றி" ஆலோசனை செய்யவில்லை; தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சுதந்திர இயக்கங்களை நசுக்கவும் சீன மக்கள் குடியரசை எதிர்ப்பதற்கு இந்நாடுகளை தளங்களாக உபயோகிப்பதற்கு வழிவகை வகுத்தன. வாஷிங்டன் மகாநாடு பற்றி வந்துள்ள அறிக்கைகளும் செய்திகளும் இந்த முடிவை உறுதிப்படுத்துகிறது.

உதாரணமாக, சிங்கப்பூரை தலைமை ராணுவதளமாக வைத்துக்கொண்டு ஒரு தென்கிழக்கு ஆசிய "கூட்டுராணுவ தலைமை"யை உருவாக்குவதுபற்றிய "திட்டத்தின் விபரங்களை" அவர்கள் விவாதித்தனர் என்று அசோஷியேட்டட் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. [...] சென்ற மாதத்தில் பிரிட் [...] அமெரிக்காவால் [...] ட்ரூம [...] காங்கிரஸ் மந்திரி [...] தெ[...] கூட்டத்தில் [...] நீட்டிபுள்ள திட்டத்தின்படி "ஒன்றுபட்ட ராணுவ தலைமை" உருவாக்கப்பட்டு அதன் கீழ் 9 பட்டாளங்கள் (டிவிஷன்கள்) இருக்கும் என்றும், (ஜப்பான் 3, கோமிண்டாங் 2, பிரஞ்சு 2, அமெரிக்கா 1, பிரிட்டன் 1) 15 அமெரிக்க விமான பட்டாளங்கள் நிறுவப்படுமென்றும் ஷின்ஹுவா செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. ஒரு அமெரிக்கன் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப்படுவான். அசோஷியேட்டட் செய்தி ஸ்தாபனத்தின்படி இந்தக் கூட்டு ராணுவத் தலைமை அட்லாண்டிக் ராணுவத் தலைமையுடன் தொடர்புகொண்டு இயங்குமாம்.

உலக யுத்தத்தைக் கிளப்பிவிடத் துடிக்கும் அமெரிக்கர்கள் ஜப்பானையும் இச்சதியில்சேர்க்க திட்டமிட்டுள்ளனர். ஆஸ்ட்ரேலியா நியூஜிலந்து பிரதிநிதிகள் வாஷிங்டன் மகாநாட்டில் கலந்துகொண்டதிலிருந்து அவைகளும் இந்த ராணுவத் தலைமையை உருவாக்க பட்டாளம் அனுப்பும் என்பது உறுதி.

இதுதான் வாஷிங்டனில் வகுக்கப்பட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளின் "பாதுகாப்பு திட்டம்! உண்மையில் அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு நாக்கி[...]டையாது வியட்[...] நாம் மலேயாகளும் வெளியிட்டுள்[...] இ[...] அழிக்க மேலும்மேலும் பட்டாளங்களையும், வெடிகுண்டு விமானங்களையும் அனுப்பிக்கொண்டிருக்கும் அதேசமயத்தில், வெட்கமில்லாமல் தென்கிழக்காசியாவின் "பாதுகாப்பு" என்று கதைக்கிறார்கள்.

'கூட்டு ராணுவத் தலைமை" அமைப்புத் திட்டம் தென்கிழக்காசியாவை அமெரிக்கா வெளிப்படையாக ஆக்கிரமிக்கும் திட்டம். அமெரிக்கா இப்பகுதி விவகாரங்களில் வெளிப்படையாக பங்கு கொள்ளும் என்று 'நியூயார்க் ஹெரால்ட் டிரைபியூன்' பத்திரிகை எழுதியதின் அர்த்தம் இதுதான். அமெரிக்கா தென் கிழக்காசிய விவகாரங்களில் வாலாட்டப் பார்க்கிறது. இச் சதி அவர்களுடைய சீனக் குடியரசு சம்பந்தமான கொள்கையுடன் தொடர்புள்ளது.

ஜனவரி 3ம் தேதி சோவியத் [...]து கோஷ்டியின் தலைவரான தோழர் விஷின்ஸ்கி ஐ. நா. [...]டியாதுச் சபையில், அமெரிக்க ராணுவத் தலைமை கோமிண்டாங் துருப்புகளை போர்மோசாவிலிருந்து தாய்லாந்துக்கும், வடக்கு பர்மாவுக்கும் கொண்டுபோய்க் கொண்டிருக்கிறதென்றும் சீன மக்கள் குடியரசை பெரும் அளவில் தாக்க தயாரிப்பு செய்கிறதென்றும், வேறு சில நாடுகளை பிடிக்க முயற்சிக்கிறதென்றும் கூறினார். தாய்லாந்தையும், பர்மாவையும் பாதிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவை திருப்திப்படுத்துவதற்காக பிரஞ்சு முதலாளித்துவ பத்திரிகைகள் சீன மக்கள் குடியரசை எதிர்த்து சென்ற சில வாரங்களாக பொய் பிரச்சாரம் செய்து வருகிறது. இந்தோ சீனவுக்கு அமெரிக்க துருப்புகள் வரவேண்டுமென்று வெட்கமின்றி ஊளையிடுகின்றன. இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு பார்த்தால் வாஷிங்டன் மகாநாட்டின் தீர்மானங்களின் தன்மை நன்றாகப் புரியும்.

ஆனால் தென்கிழக்காசியாவில் ஏகாதிபத்திய சதிகாரர்களை எதிர்க்கும் சக்திகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. இந்நாட்டு தேசிய இயக்கங்களின் பின்னே கோடானுகோடி மக்கள் திரண்டு வருகின்றனர். ஏகாதிபத்தியங்களுக்கு ஆசியாவில் எதிர்ப்பு நிறைய இருக்கின்றது என்பதை தற்சமயம் அமெரிக்க பிற்போக்கு பத்திரிகைகள்கூட ஒப்புக் கொள்கின்றன.

ஐரோப்பாவைப் போல ஆசியாவிலும் யுத்தம் தொடுக்க தீவிரமாக ஆலோசனை செய்தபிறகே செயலில் இறங்க வேண்டுமென்று 'நேஷன்' என்ற பத்திரிகை கூறுகிறது.

வாஷிங்டன் மகாநாடு இருக மூடப்பட்ட இரும்புக் கதவுகளுக்குப் பின்னால் நடைபெற்றது என்பதிலிருந்தே ஏகாதிபத்தியவாதிகள் மக்களைக்கண்டு எவ்வளவு பயப்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது. கொரியாவில் நடக்கும் உண்மைகளை உணரும் தென்கிழக்காசிய மக்கள் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட பெருமுயற்சிகள் செய்து வருகின்றனர்.

மேலதிகாரியின் அட்டூழியம் ஒழிக!

தொழிலரசு பத்திரிகையை பலப்படுத்துக!

மதுரை ரெயில்வே தொழிலாளர் பொதுக்கூட்டம்

மதுரை எப் 8—

7-4-52 திங்கள் மாலை 7 மணிக்கு தெ இ. ர. லேபர் யூனியன் மதுரை கிளையின் சார்பாய் தோழர் டி. துரைராஜ் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 3000 தொழிலாளர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டார்கள். கொல்லம் கிளை சங்க காரியதரிசி தோழர் குலாம் தஸ்தகீர் கொல்லம் லோகோ போர்மென், பொதுஜன ரயில்வே சொத்துக்களைத் தன் சொந்த குடும்ப உபயோகத்திற்கு துர்வினியோகம் செய்து வருவதையும், லஞ்சம் முதலிய அக்கிரமங்களை மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்த ஒரே காரணத்தால் பல தொழிலாளர் மதுரைக்கு மாற்றப்பட்டுள்ளதையும் கண்டித்து பேசினார்.

இடைப்பள்ளி சதி வழக்கிலிருந்து சமீபத்திலிருந்து விடுதலையான தோழர் வி சௌரிமுத்து, தொழிற் சங்க ஐக்கிய முன்னணியின் அவசியத்தை வலியுறுத்தியும் தொழிற் சங்க, விவசாய சங்க ஊழியர்களையும், மற்றவர்களையும் சிறையிலடித்து கொடுமைப் படுத்தியதையும், குறிப்பாக எர்ணாகுளம் ஜெயிலில் தோழர் பிலோமினா என்ற தாயையும், அவரது மகன் ஜோசப் என்பவரையும் நிர்வாணமாய் வைத்து பலாத்காரமாய்ப் புணரச் செய்த மிருகத்தனமான கொடுமைகளையும் கண்டித்துப் பேசினார்.

கிளை சங்க காரியதரிசி தோழர் எஸ். சொடலைமுத்து பல தீர்மானங்களை பிரேரேபித்து மதுரை டி. ஓ. எஸ். சாண்டி தொழிற் சங்க ஊழியர்களையும், கிளை சங்க காரியதரிசிகளை பழிவாங்கும் நோக்கத்துடன் மாற்றப் படுவதை கண்டித்தும், ஸ்தல மேல் அதிகாரிகள் தொழிற் சங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மண்டபம் சம்பந்தம் தொழிலரசு பத்திரிக்கை விஸ்தரிக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றியும், தொழிலாளர்கள் எல்லாரும் சந்தாதார்களாக ஆகவேண்டியதைப் பற்றியும் பேசினார்.

மோட்டார் தொழிலாளர் சங்கக் கோரிக்கை

மேட்டுப்பாளையம், ஏப். 4—

மார்ச்சு 30-ந் தேதியன்று தொப்பம் பாளையம் கிராமத்தில் மேட்டுப்பாளையம் நீலகிரி மோட்டார் தொழிலாளர் சங்க மகாசபை கூட்டம் ஜி. எம். ராஜு தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் 175 உறுப்பினர் பிரசன்னமாயிருந்தார்கள். பழிவாங்கப்பட்ட தோழர் கே. சங்கரனை உடனே வேலைக்கு எடுத்துக் கொள்வதுடன் வேலையில்லா காலத்திற்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டு என்று சர்க்காரைக் கோரியும் பவானி தொழிலாளர்களின் குறையை குறித்து சங்கம் அனுப்பிய மகஜரை துரிதமாக சர்க்கார் கவனிக்கவேண்டும் என்று கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ரயில்வேயில் வெள்ளையர் கொள்ளைக்கு தோழர் நம்பியார் எம். பி. கண்டனம்

சென்னை, ஏப். 11—

சென்னை சேத்துப்பட்டில் (மங்களபுரம்) நேற்று மாலை நடைபெற்ற 3000பேர்கொண்ட ரயில்வே தொழிலாளர்களுடைய பாராட்டுக் கூட்டமொன்றில் பேசுகையில் தோழர் நம்பியார் மக்கள் நல உரிமைகளுக்கு விரோதமாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஜனநாயக விரோத ராஜாஜி மந்திரி சபையை கண்டித்தும், இந்திய ரயில்வேக்களால் இந்திய சர்க்காருக்கு 55 கோடி ரூபாய் மிச்சமென்றும் அதில் 30 கோடி ரூபாய் எங்கோ உள்ள வெள்ளை முதலாளிகளுக்கு வருடா வருடம் வட்டியாக அளிக்கப்பட்டு வருவதாகவும், இது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்றும் கூறினார்.

தோழர் கே. டி. ராஜு பாராட்டுக்கு பதிலளித்து பேசுகையில் இன்று ரயில்வேயிலிருந்து நூற்றுக்கணக்கான தோழர்கள் பழிவாங்கப்பட்டு வேலையிழந்து நிற்பதற்கு சட்டம் வகுத்து கொடுத்த முன்னாள் கவர்னர் ஜெனரலே இந்த புழக்கடை வழி ராஜாஜியென்றும், இவருடைய சாணக்கியம், குட்டி கதைகளால், அடக்குமுறையால் நாட்டையாள எண்ணினால் அதை அனுமதிக்க முடியாது என்று கூறினார்.

தோழர் நம்பியாருக்கு காங்கி, வாச் அண்ட் வார்ட் தோழர்கள் சார்பில் ரூ 100 பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் தஞ்சை தோழர் எஸ். ராமலிங்கம் எம். எல் ஏ., சி. பார்த்தசாரதி, கவிஞர் மாணிக்கவாசகமும் முதலியோர் [...]பேசினர்.

காங்கிரஸ் மந்திரிசபை அமைப்பைக் கண்டித்தும், தோழர் சி. ஏ. பாலன் தூக்கு தண்டனையை ரத்து செய்யுமாறும், தோழர் நம்பியார் பீகிங் செல்ல பாஸ்போர்ட் அளிக்குமாறு கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வார முறை வேண்டும்

மேல்தனிப்பட்டு விவசாயிகள் கோரிக்கை

மேல்தனியாலம்பட்டு, ஏப். 3—

மேல்தனியாலம்பட்டுவில் 30-3-52ல் தோழர் ரங்கசாமியை தலைவராகவும், தோழர் முருகேசனை செயலாளராகவும் கொண்ட விவசாய சங்கம் அமைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக அன்றைய தினமே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், குத்தகை முறையை ரத்து செய்து வாரமுறையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், வாரத்தை விவசாயிக்கு 2/3 பங்கு என்றும், நிலச்சுவானுக்கு 1/3 பங்கு என்று நிர்ணயிக்க வேண்டுமென்றும் விவசாயக் கூலி தினம் பெரிய படிக்கு 4 படி நெல் வீதம் கூலி கொடுக்கப்பட வேண்டுமென்றும், பாலன் தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

●

[...] வெள்ளூர்

அறந்தாங்கி தாலுகா வெள்ளூர் கிராமத்தில் 30-3-52ல் நடைபெற்ற 1000 பேர்கள் கொண்ட பொதுக் கூட்டத்தில் விவசாய சங்கம் அமைக்கப்பட்டது.

●

ஈரோடு பிர்க்கா விவசாயிகள் முதலாவது மகாநாடு

ஏப்ரல் 13-ல் நடைபெறும்

ஈரோடு, ஏப். 6—

ஈரோடு பிர்க்கா விவசாயிகள் முதலாவது மகாநாடு 13-4-52 ஞாயிற்றுக்கிழமை ஈரோடு கருங்கல்பாளையத்தில் கிருஷ்ணம்பாளையம் ரோட்டில் களப்பால் குப்புசாமி பந்தலில் நடைபெறுமென்று மகாநாட்டு வரவேற்பு கமிட்டி செயலாளர் அறிவிக்கிறார். தோழர் மணலி சி. கந்தசாமி எம். எல். ஏ, தலைமை வகிக்கிறார். பாப்பாங்குளம் சொக்கலிங்கம் [...] அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார். கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன், தோழர்கள் வி. மதனகோபால் எம். எல். ஏ, கே டி ராஜு எம் எல் ஏ., பழனிசாமி எம். எல் ஏ, பொன்மலை தோழர் பாப்பா மகாநாட்டில் கலந்துகொள்ளுவார்கள்

★

பழைய பாக்கி நிலவரியை வஜா செய்

அதிகாரிகளின் கெடுபிடிக்குக் கண்டனம்

தலைக்காட்டிப்புரம், எப்ரல்4—

கோவில்பட்டி தாலுகா தலைக்காட்டுபுரம் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் எப்ரல் 3-ல் இங்கு தோழர் அ. துரைசாமித் தேவர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பகுதியில் 4 ஆண்டுகளாய் விளைச்சலின்றி பஞ்சம் மேலிட்டு நிலவரி செலுத்த முடியாமல் பாக்கி விழுந்துள்ளதை காங்கிரஸ் சர்க்கார் கெடுபிடி செய்து வசூலிக்க முயலுவதைக் கண்டித்தும் இந்த பாக்கிகளை வசூலிப்பது நிறுத்தப்பட வேண்டுமென்று கோரி அதிகாரிகளுக்கு தூது கோஷ்டி அனுப்புவதென்றும்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர் சி. ஏ. பாலன் மரண தண்டனை ரத்துசெய்யும்படிக் கோரியும் ஆச்சாரியாரை முதன் மந்திரியாக்கியதையும் மேல் சபைக்கு நியமித்ததையும் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

●

அழகிரி நாடக மன்ற அமைப்பு

பங்களூர் ஏப். 9—

பங்களூரில் 6-4-52ல் 'அழகிரி நாடக மன்றம்' அமைக்கப்பட்டது. தோழர் எம். ஆர். ராமன் பொதுச் செயலாளராகவும், தோழர் எஸ். ஏ. சுப்பிரமணி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அமைப்புக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் தோழர் வி. கு இசை, கலை கலைக்காக என்ற கருத்தை கண்டித்தும், கலை மக்களுக்காகவும் வாழ்க்கைக்காகவுமே என்று வலியுறுத்திப் பேசினார்.

★

விவசாய சங்கத் திறப்பு விழா

தங்கநாயக்கன்பட்டி, ஏப் 6—

தோழர் வீரப்பன் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் நாமக்கல் தொகுதி எம். எல். ஏ. கே. வி. ராமசாமி செங்கொடி ஏற்றி வைத்துப் பேசினார். மாடகாசம்பட்டி ராமசாமி கவுண்டர், சிவநேசன், வி. இளங்கோ ஆகியோர் சங்க அவசியம்பற்றிப் பேசினர். பின்னர் தோழர் எஸ். கணபதி தோழர் பாலன் மரண தண்டனையை ரத்து செய்யக் கோரியும், ராஜாஜி மந்திரி சபை அமைவதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

●

பழனி நகராண்மை கழகத்தின் பஞ்சை புத்தி

பழனி, எப்ரல் 4—

பழனி நகராண்மை கழகத்தினர் 8, 12, 13, 14 வட்டங்களில் பெண்களுக்கு தனியாக இருந்த கக்கூஸ்களை எவ்வித காரணமுமின்றி இடித்து விட்டு மக்கள் அதிகமாக புழங்கி வரும் இடங்களில் வெற்றிலை பாக்கு தேத்தண்ணீர் கடைகளுக்குப் பக்கத்தில் பாய் தட்டி கக்கூஸ் நிறுவியுள்ளனர்.

இதனால் பெண்களுக்கு ரொம்ப இடைஞ்சலாயிருக்கிறது. ஆகவே, நகரமக்கள் கக்கூஸ் கட்டித்தர வேண்டுமென்று கோரியுள்ளனர்.

நிரபராதி என நிரூபிக்கப்பட்ட பின்பும் 19 மாதங்கள் சிறையில்

அமெரிக்க நீக்ரோவுக்கு இழைக்கப்பட்ட கொடுமை

நியூயார்க் ஏப். 9—

ரீஸ் என்ற நீக்ரோ, வில்லீடிம்மன்ஸ் என்ற மற்றொரு நீக்ரோவுடன் 12-5-50ல் ஒரு கொலைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார்.

ரீஸ் நிரபராதி என விடுவிக்கப்பட்ட போதிலும், வேறு எந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லாதிருந்தும் நீதிபதி ப்ரெட் ஹாக்கரின் உரையின் பேரில், கோர்ட் ரிகார்டுகள் கூறுவதுபோல், ஜெயிலில் 19 மாதங்கள் வைக்கப்பட்டிருந்தார் சட்டவிரோதமாக!

டாம்பாடி டிரிப்யூன் என்ற ஸ்தல பத்திரிகை இதுபற்றி எழுதிய பின்னரே ரீஸ் விடுவிக்கப்பட்டார்.

நீக்ரோக்களுக்காக உழைக்கும் வக்கீல்கள் நியூயார்க்கில் ஏதாவது நடவடிக்கை எடுத்தாலொழிய இந்த மாதிரியான கொடுமைகளைக் கேட்பாரில்லை.

கீரனூரில் விவசாயிகள் கூட்டம்

நன்னிலம், ஏப். 7—

நன்னிலம் தாலுக்கா கீரனூரில் விவசாயி சங்கத்தின் சார்பில் தோழர் எம். நாராயணசாமியின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 5000 விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் கூடினர். தஞ்சை மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் தோழர் காத்தமுத்து, தொழிலரசு உதவி ஆசிரியர் தோழர் என். பாஸ்கரன் முதலியோர் பேசினர். தோழர் சி. ஏ. பாலன் தூக்கு தண்டனையை ரத்துசெய்யும்படிக் கோரியும் தோழர் சீனிவாச ராவை விடுதலை செய்யும்படிக் கோரியும் மேலும் ஆச்சாரியார் மேல்சபைக்கு நியமிக்கப்பட்டதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

இங்கும்—அங்கும்

"கம்யூனிஸ்டுகள் 62 பேர் சட்ட சபைக்குவந்துவிட்டார்கள் என்றதும் விலைவாசி குறைய ஆரம்பித்து விட்டதே!" என்று சொல்லிக்கொண்டே மார்க்கெட்டிலிருந்து வீடு திரும்பிய செல்வி, வீட்டிற்குள் நுழைந்தாள்.

படித்துக் கொண்டிருந்த நான் "இல்லை" என்று சொல்லிக் கொண்டே மேலே தொடர்ந்து படிக்கலானேன்.

வாங்கிவந்த பண்டங்களை ஒரு அறையில் வைத்துவிட்டு, செல்வி என்னிடம் வந்து, பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மேலும் பேச்சைத் தொடங்கினாள்.

"என்னமோ, மார்க்கெட்டிலே ஒரே பேச்சாக இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் மந்திரிசபை அமைக்கப் போகிறார்கள் என்று பெரிய வியாபாரிகள் அரண்டுபோய் விலையைக் குறைத்து விட்டார்கள்' என்றாள்.

"அது ஜனங்களுக்கு எங்கள்மீது எவ்வளவு நம்பிக்கை இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. விலைவாசி வீழ்ச்சியை ஜனங்கள் வரவேற்கிறார்கள். ஆனால் அதன் உண்மை சொரூபத்தையும், அதற்கான உண்மைக் காரணங்களையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை" என்றேன்

"நீங்கள்தான் ஒன்றுமறியாத அப்பாவிகளாகிய எங்களுக்கு புரியவையுங்களேன். புஸ்தகத்தைத் தான் கொஞ்சம் கீழே வையுங்களேன்!" என்று கிண்டலாக தன் கோரிக்கையை வலியுறுத்தினாள்.

செல்விக்குச் சொல்லாமல் நான் பின் யாருக்குச் சொல்லப் போகிறேன். இனி புஸ்தகத்தில் மனந்தான் செல்லுமா? விஷயத்தை விளக்கத் தொடங்கினேன்.

"அரசாங்கமோ அல்லது வியாபாரிகளோ பார்த்து விலைவாசிகளை குறைக்கவில்லை. ஐந்தாண்டுகளாக விலைவாசிகளை குறைக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். ஆனால் விலைவாசி ஏறிக் கொண்டேயிருந்தது. இப்பொழுது திடீரென்று அவர்கள் எதிர்பாராத முறையில் விலைவாசி வீழ்[illegible]கிறது"

"அப்படியென்றால் விலைவாசியை ஏற்றுவதும் இறக்குவதும் அவர்கள் கையில் இல்லை என்று அர்த்தமா?" என்று குறுக்கிட்டாள்.

"நீ காய்கறி மார்க்கெட்டுக்கு போகிறாய் என்று வைத்துக்கொள்; கத்தரிக்காய் கூடை கூடையாக வந்து குவிந்து கிடக்கிறது; வாங்குவதற்கு ஆள் இல்லை. கத்தரிக்காய்காரி கத்தரிக்காயை விற்றுவிட்டு வீடு திரும்ப வேண்டும். அவள் என்ன செய்கிறாள்? வருகின்றவர்கள் போகின்றவர்களை எல்லாம் வருந்தி அழைக்கிறாள்; விலையையும் குறைத்துக்கொண்டே போகிறாள். ரொம்ப மலிந்து போகிறது கத்தரிக்காய், இல்லையா."

"அதைப்போல நமது நாட்டிலே சாமான்கள் மலிந்து போய் விட்டனவா? அப்படியானாலும் பரவாயில்லையே!" என்றாள்.

"கத்தரிக்காய் முதல் நாள் ரொம்ப மலிவு என்று கத்தரிக்காய் வாங்கலாம் என்று அந்தக் கூடைக்காரி இடத்தில் அடுத்தநாள் நீ போனால், அவள், ஒன்று வந்திருக்கமாட்டாள் அல்லது வெண்டக்காய் கொண்டுவந்திருப்பாள்; அல்லது விற்கின்ற காயாகப் பார்த்து வாங்கிவந்திருப்பாள்."

"ஓஹோ, சாமான்களை வாங்குவதற்கு இந்தியாவில் ஆள் இல்லையா?

"ஆளுக்கு என்ன அம்மா பஞ்சம்"

"பின்?"

"தட்டுக்குத்தான் பஞ்சம்"

"ஆமாம், ஆமாம். அதுதான் உண்மை" என்றாள் செல்வி.

"அதாவது திடீரென்று உன்னிடம் நான் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே எனக்கு வலிப்பு வந்துவிடுகிறது என்று வைத்துக்கொள். நீ என்ன செய்வாய்?"

"உங்களுக்கு என் வலிப்பு?"

"என் செய்வதென்று தெரியா[மல்] டாக்டரைக் கூப்பிடுவாய் அல்லவா? அதைப் போலத்தான் அரசாங்கமும் பெரு முதலாளிகளும் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கின்றனர்."

"என்னதான் செய்வார்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"அதையும்தான் நீ பார்த்து வருகிறாயே. துணிவிலை விழுந்தது; முதலாளிகள் மில்களை மூட ஆரம்பித்திருக்கிறார்கள்; மில் தொழிலாளிக்கு வேலை போகிறது; விவசாயிக்கு பருத்தி விற்பனையாவதில்லை. இதனால் ஜனங்களுக்கு கிடைத்து வருகின்ற துணியும் கிடைக்காது போகும்."

"சமூகத்திற்கு வலிப்பு வந்த மாதிரியான நிலை என்று சொல்லுங்கள்? சரக்கை விற்க வழியில்லை. அப்படித்தானே?"

"விற்க வழியில்லாமல் என்ன? ரஷ்யக்காரர்கள், சீனக்காரர்கள், கிழக்கு ஐரோப்பாக்காரர்கள் எவ்வளவு துணி இருந்தாலும் சொல்லு, நாங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்கிறார்கள். ஆனால் அமெரிக்காக்காரன் அவர்களோடெல்லாம் நீ சேரக்கூடாது என்று நம்மவனை மிரட்டுகிறான். இவர்கள் சரியென்று அமெரிக்காவுக்கு பயந்து கிடக்கிறார்கள்."

"அமெரிக்காரனுக்கு இங்கு என்ன ஜோலி?"

"கிராம ஜனங்களுக்கு ஏதாவது அரசாங்கம் சகாயம் செய்தால், அவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும்; அவர்கள் கையில் கிடைத்த துட்டுடன் துணிவாங்க கடைக்கு வந்துவிடுவார்கள்; துணி விற்கும். ஆனால் அதையும் செய்யாதே என்று மிரட்டுகிறான் அமெரிக்காக்காரன்."

"நன்றாக இருக்கின்றதே சமாசாரம். நம் வீட்டில் நாம் என்ன செய்யலாம், செய்யக்கூடாது என்று வெளியில் இருந்து வந்துசொன்னால் ரொம்ப நன்றாக இருக்குமே!"

"அப்படித்தானம்மா நடந்து வருகிறது மானங்கெட்ட காங்கிரஸ் ஆட்சியிலே!"

"சீனாவிலே விலைவாசி குறைந்ததே அது எப்படி. கொஞ்சம் சொல்லுங்களேன். இங்கு நடக்[illegible]தான் தெரிந்த விஷயம். அங்கு என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம்"

"அங்கேயா? அப்படி வா! அமெரிக்காக்காரனை அடித்து விரட்டினார்கள்!" என்றேன்.

"அதுதான் சரி" என்றாள் செல்வி.

"அரசாங்கம் தேசத்திற்கு ஒரு திட்டம் வைத்தது; பண்டங்களின் விலைகளை ஸ்திரப்படுத்துவது என்று திட்டமிட்டார்கள்; இயந்திரத் தொழில் பயிர்த்தொழில் இரண்டின் வளர்ச்சிக்கும் திட்டமிட்டார்கள்; நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையில் வர்த்தகம் தழைக்கத் திட்டமிட்டார்கள்"

"கம்யூனிஸ்டுகளே எப்பொழுதும் திட்டமிட்டுத்தானே காரியங்களைச் செய்வார்கள்!" என்றாள் செல்வி பெருமையுடன்.

"இரண்டே வருடத்தில் அதை சாதிக்கவும் செய்தார்கள்"

"அதாவது சீனாவிலே தொழிற்சாலைகளை மூடி, தொழிலாளிகள் தெருவில் நின்று, விவசாயிகள் நாசமடைந்து விலை வீழ்ச்சி ஏற்படவில்லை என்கிறீர்கள் அல்லவா?" என்றாள்.

"உற்பத்தி பெருகி, ஜனங்களின் வருமானம் அதிகரித்து, திட்டமாக விலைவாசி குறைக்கப்பட்டு, குடும்ப வாழ்க்கை சுகப்பட்டு வருகிறது அங்கு" என்றேன்.

"நாம் சீனாவுக்கு போய் விடலாமா?" என்றாள் செல்வி குறும்புத்தனமாக!

"சீனாக்காரர்கள் உனக்கு உதவி செய்ய வருகிறார்களே! உன் சாமானை நான் வாங்கிக் கொள்கிறேன். தொழிற்சாலையை மூடாதே; தொழிலாளியை வேலையிலிருந்து தள்ளாதே; விவசாயிகளை கொல்லாதே; பதிலுக்கு மிஷின்கள் தருகிறேன். புதிய தொழிற்சாலைகளையும் கட்டு என்கிறார்களே ஆனால் காங்கிரஸ்காரர்களுக்கு அமெரிக்கா மேலே ஆசை!" என்றேன்

அதற்குள் யாரோ என்னை பார்க்க வந்தார்கள் என்று செல்வி உள்ளே போய்விட்டாள் செல்வி.—செல்வன்

கட்சித் தொடர்பற்றவர்தான் குடியரசு தலைவராக வேண்டும்

பேராசிரியர் கே.டி. ஷாவிற்கு ஆதரவு திரளட்டும்!

காங்கிரஸ் யதேச்சாதிகாரம் ஒழியட்டும்!

பேராசிரியர் கே. டி. ஷா இந்திய குடியரசு தலைவர் தேர்தலில்போட்டியிட தீர்மானித்திருப்பது ஜனநாயகத்தை விரும்பும் அனைவராலும் வரவேற்கப்படும். அவருடைய நியமனப்பத்திரம் பிரபல இந்திய விஞ்ஞானி டாக்டர் மெகனாட் சாகாவால் பிரரேபிக்கப்பட்டு தோழர் ஏ. கே. கோபாலனால் ஆமோதிக்கப்பட்டு ஏப்ரல் 7ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சியைச் சேர்ந்த ராஜேந்திர பிரசாத்தையே மீண்டும் குடியரசுத் தலைவராக்கிவிட முன்வந்து விட்டனர்.

தங்கள் கட்சி ஆட்களையே மாகாண கவர்னர்களாகவும் குடியரசு தலைவராகவும் வைத்துக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் எதேச்சாதிகார ஆட்சி புரிந்தவருவது நாடறிந்த விஷயமாகும். அரசியல் சட்டத்தில் கவர்னர்களுக்கும் குடியரசு தலைவர்களுக்குமுள்ள விசேஷ அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து மக்களால் வெறுக்கப்படும் காங்கிரஸ் ஆட்சியை மக்கள் மீது திணிக்கின்றனர். சென்னையில் தங்கள் கட்சி ஆளை கவர்னராக நியமித்து அரசியல் சட்டத்திற்கு விரோதமாய் ஆச்சாரியார் மேல் சபைக்கு நியமிக்கப்பட்டதும் மைனாரிட்டி கட்சியான காங்கிரசின் மந்திரி சபை பலவந்தமாய் திணிக்கப்படுவதும் நமக்குத் தெரியும்.

அரசாங்கத்தில் மிகவும் உயர்ந்த பல முக்கியமான அதிகாரங்களையும் பொருப்புகளுமுடைய குடியரசு தலைவர் பதவிக்குக் கூட, தங்கள் விருப்பத்திற்கேற்றபடி தாளம் போடக்கூடிய தங்கள் கட்சியாளையே அமர்த்திவிட முன்வந்து விட்டனர் காங்கிரஸ் தலைவர்கள். ஜனநாயகத்தை விரும்புவோர் யாவரும் காங்கிரஸ் தலைவர்களின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவது அவசியமாகும். எந்த கட்சியையும் சேராத, எல்லா கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, பாரபட்சமின்றி தேசத்தின் பொது நலன் [களுக்குகந்த] முறையில் செயலாற்றக் கூடிய ஒருவர் குடியரசு தலைவராயிருப்பதுதான் நியாயமாகும். இந்த முக்கியமான நோக்கத்தை உத்தேசித்தே டாக்டர் மெக்னாட்சாகாவும் தோழர் ஏ கே. கோபாலனும் முன் முயற்சி எடுத்து பேராசிரியர் ஷாவின் நியமனப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளனர். பேராசிரியர் ஷாவும் இதே நோக்கத்திற்காகத்தான் தேர்தலில் போட்டியிட இசைந்துள்ளார்.

பேராசிரியர் ஷா குடியரசு தலைவர் தேர்தலில் எக்கட்சியிலும் சேராத சுயேச்சை அபேட்சகராய் போட்டியிட வேண்டுமென்று கேட்டு டாக்டர் மெக்னாட் சாகாவும் தோழர் ஏ. கே. கோபாலனும் அவருக்கு ஏப்ரல் 3-ல் கடிதம் எழுதினர். இந்திய அரசாங்கத்தின் தலைவராயிருப்பவர் எக்கட்சியிலும் சேராதவராகவும் இந்த நாட்டின் முன்னுள்ள ஒவ்வொரு பிரச்னையையும் பாரபட்சமின்றி சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்யக் கூடியவராகவும் இருக்கவேண்டுமென்றும் இதுவே அரசியல் சட்டத்தின் உண்மையான நோக்கமாகுமென்றும் அவர்கள் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டனர்.

இந்த உயர்ந்த பதவிக்கு பொருத்தமானவர் பேராசிரியர் ஷா

மேலும் அவர்கள் பேராசிரியர் ஷாவிற்கு எழுதியதாவது: "உங்களுடைய குணநிசயங்களும் உங்களுடைய சாதனைகளும் கவனிக்கும் பொழுது நீங்கள்தான் இந்த உயர்ந்த பதவிக்கு ஏற்றவராவீர்களென்று நாங்கள் கருதுகிறோம். பார்லிமெண்டிலும் அரசியல் நிர்ணய சபையிலும் நீங்கள் செய்துள்ள வேலையையும் நடந்துகொண்ட முறையையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். ஆழ்ந்த அறிவையும், ஆராய்ச்சியையும் உயர்ந்த குறிக்கோள்களையும் அப்பழுக்கற்ற தன்மையையும் முற்போக்கான கருத்துகளையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்களென்பதில் ஐயமில்லை. அதே சமயத்தில் நீங்கள் எந்த கட்சியையும் சேர்ந்தவரல்லவென்பதையும் சந்தேகத்திற்கிட இடமில்லாத நேர்மையாளரென்பதையும் தேசபக்தியுடையவரென்பதையும் நாங்கள் அறிவோம். இந்த நாட்டில் உருவாகி வந்துள்ள பொருளாதார அரசியல் சிந்தனையில் உங்களுக்கு உள்ள பாத்திரத்தையும், உங்களுடைய விஞ்ஞான நூல்கள் மூலமும் தேசப் பொருளாதார திட்டம் சம்பந்தமாய் ஆராய்ச்சி செய்து மிகுந்த பிரயாசைக்குப் பின் 27 பாகங்களில் வெளியிட்ட நூல் மூலமும் நீங்கள் ஆற்றியுள்ள பணியையும் நாங்கள் அறிவோம். பொருமை மிகுந்த ஆராய்ச்சியின் விளைவான இந்த சிறந்த நூலின் ஆசிரியர் தேசிய திட்ட கமிஷனில் இடம் பெறாமலிருப்பது மிகவும் வருந்தத் தக்கது.

"சென்ற 5 ஆண்டுகள் மத்திய சட்ட சபையில் மெம்பராயிருந்த நீங்கள் அங்கு செயலாற்றிய முறை பணிவிற்கும் கண்யத்திற்கும் சட்ட சபையில் நடந்துகொள்ள வேண்டிய முறைக்கும் நீண்டகால தேச நலன்கள் பற்றி சட்டசபை உறுப்பினருக்கிருக்கவேண்டிய உணர்விற்கும் சிறந்த உதாரணமாக விளங்குகிறது. ......நமது தேச சரித்திரத்தின் இந்த நெருக்கடியான கட்டத்தில் உங்களைப்போன்ற தைரியமும் ஆற்றலும் உணர்வும் படைத்தவர் ஒருவர் அரசாங்கத்தின் தலைமையில், குடியரசு தலைவர் பதவியில், மக்களின் பிரதிநிதியாகவும் [illegible]ளுடைய [illegible] பாதுகாவலனாகவும் விளங்கக்கூடிய இந்த பதவியில் அமருவது அத்தியாவசியமாகும்.

காங்கிரஸ் தலைவர்கள் அரசியல் சட்டத்தை புறக்கணித்து வருவதை நோக்கினால், அறிவும் ஆற்றலும் தைரியமுமுடையவர் ஒருவர், கட்சித் தலைவர்களின் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாமல் சட்டப்படி தனக்குள்ள கடமைகளை தைரியமாக நிறைவேற்றக் கூடிய ஒருவர் குடியரசு தலைவராக வேண்டியது மிகவும் அவசியமாகுமென்று அவர்கள் கூறுகின்றனர்.

காங்கிரஸ் எதேச்சாதிகாரம்

"...சென்ற ஆண்டில் அரசியல் சட்டத்தில் ஒரு முக்கியமான அடிப்படையான திருத்தம் மக்களின் பிரஜா உரிமைகளில் மிகவும் முக்கியமானதை பறித்துவிடக்கூடிய ஒரு திருத்தம், கிஞ்சித்தும் பொறுப்புணர்ச்சி இன்றி அவசர அவசரமாய் நிறைவேற்றப்பட்டதைக்கண்டு நாம் மனவேதனையடைந்தோம். இப்பொழுதுகூட மத்திய கட்சித் தலைவரின் ஆணைக்குட்பட்டு கவர்னர்கள் அரசியல் சட்டத்தைப்பற்றி அறவே கவலைப்படாமல் சட்டத்திற்கு விரோதமானமுறையில் மேல் சபைக்கு நியமனங்கள் செய்வதையும் ராஜ்ய மந்திரி சபைகளை அமைப்பதையும் நாம் கண்டுவருகிறோம்...தனிநபர்களின் நேரடியான யதேச்சாதிகார ஆட்சி சர்க்கார் வரவு செலவிலும் ஜீப் மோசடி, ஸ்தானிகர் நியமனங்கள் முதலியவற்றிலும் கூட பிரதிபலித்து வருகிறது. இவை பயங்கரமான அறிகுறிகளாகும். குடியரசு தலைவர் பதவிக்கு முதன் முதலாக இப்பொழுதுதான் உண்மையில் தேர்தல் நடக்கப்போகிறது. இந்த தேர்தலில் உறுதியும் தைரியமும நல்லுணர்வும் படைத்தவர் ஒருவர் தேர்தெடுக்கப்படாவிட்டால் அரசியல் சட்டப்படி இருக்கவேண்டிய சுதந்திரத்திற்குகூட அபாயமேற்பட்டு விடுமென்று நாங்கள் அஞ்சுகிறோம்".

புனிதமான கோட்பாடு நிலைநாட்டப்படவேண்டும்

"குடியரசுத் தலைவர் தேர்தல் சம்பந்தமாய் அரசியல் சட்டத்திலுள்ள ஷரத்துகளும் இந்த ஷரத்துகளின் கீழ் சமீபத்தில் இயற்றப்பட்டுள்ள சட்டங்களும் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களிடையே காங்கிரசல்லாதோரின் எந்த கூட்டணியும் வெற்றிபெறுவது துர்லபமென்பதை தெளிவு படுத்துகின்றன. எனவே நீங்கள் வெற்றி பெறுவீர்களென்று எங்களால் உத்திரவாதமளிக்க இயலாது. ஒரு கோட்பாட்டை நிலைநாட்ட முயலும்பொழுது வெற்றிபெற சந்தர்ப்பமிருக்கிறதா என்று நீங்கள் தயங்கமாட்டீர்களென்பது எங்களுக்குத் தெரியும். குடியரசுத் தலைவர் கட்சிப் பற்றற்றவராயிருக்க வேண்டுமென்னும் இந்த புனிதமான கோட்பாடு நம்முன்னுள்ளது.

பேராசிரியரின் பதில்

இந்த கடிதத்திற்கு பேராசிரியர் ஷா எழுதிய பதிலில் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும்படி தன்னை அழைத்ததற்காக தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு, அவர் மேலும் கூறுவதாவது: "நீங்கள் கூறுவதை நான் ஒத்துக்கொள்கிறேன். குடியரசுத் தலைவ[illegible] சியல் கட்சிகளோடு தொடர்பி[illegible] வராகவும் கட்சிப் பற்று அற்ற[illegible] வும் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவராகவும்தான் இருக்க வேண்டும். அரசியல் சட்டத்தில் இதற்கான ஷரத்துக்கள் இல்லை என்றாலும், இதுதான் அரசியல் சட்டத்தின் உண்மையான நோக்கமாகும்."

ராஜேந்திர பிரசாத்திடம் தனக்கு விசேஷ மதிப்புண்டு என்றாலும் தன் சொந்த விருப்பங்களை பொதுவான கோட்பாடுகளுக்கும் பொது நன்மைக்கும் கீழ்ப்படுத்துவது அவசியமாதலால், கட்சித் தொடர்பற்ற தனி நபராய் இத்தேர்தலில் போட்டியிட சம்மதிப்பதாகவும் பேராசிரியர் ஷா பதிலளித்தார்.

காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகளின் மூலம் பார்லிமெண்டிற்கும் சட்ட சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரசல்லாத உறுப்பினர்கள் அனைவரும் பேராசிரியர் ஷாவை ஆதரித்து கட்சித் தொடர்பற்றவரே குடியரசு தலைவராகவேண்டும், எந்த கட்சித் தலைமையும் யதேச்சாதிகார ஆட்சி புரிய இடமளிக்கக் கூடாதென்னும் உயர்ந்த கோட்பாட்டை நிலைநாட்டுவதற்குப் பாடுபடுவது அவசியமாகும்.

தோழர் லோகநாதனுக்கு வரவேற்பு

அந்தராசிப்பாளையம், ஏப். 5—

தென்னாற்காடு ஜில்லா விவசா[illegible] சங்க காரியதரிசி தோழர் ஏ. லோகநாதன் மீதிருந்த பிடிவாரண்ட் [illegible] செய்யப்பட்டதை முன்னிட்டு ஏ[illegible]ரல் 4-ல் அந்தராசிப்பாளையத்தில் வரவேற்புக் கொண்டாட்டக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆர். முத்துசாமி தலைமை வகித்தார். வரவேற்பிற்குப் பதிலளிக்கும்போது தோழர் லோகநாதன் ஏழை, நடுத்தர, பணக்கார விவசாயிகள் அனைவரும் விவசாயத் தொழிலாளர்களும் ஜனநாயக ஸ்தாபனமான விவசாய சங்கத்திலும் விவசாயத் தொழிலாளர் சங்கத்திலும் ஒன்றசேர்ந்து நின்று போராடினால்தான் நிலம் பெறமுடியும், தங்கள் ஜீவாதாரமான உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென்று வலியுறுத்தினார். கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ரூ. 22-2-0 வசூலிக்கப்பட்டது.

பாலன் விடுதலைக்கு சிவதாபுரம் மக்கள் மகஜர்

சிவதாபுரம் மக்கள் 226 பேர்கள் கையெழுத்திட்டு பாலன் தூக்கு தண்டனையை நீக்கவேண்டுமென்று கோரி சென்னை கவர்னர் பிரகாசாவுக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர்.

" அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை. அரசியல் சட்டத்தின்மூலம் அது பரிபூர்ணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய நாம் ஓய்ந்திருக்க மாட்டோம். "

ஜனசக்தி

சனி 12-4-'52

புதிய சட்டசபை உடனே கூட்டுக!

ஆச்சாரியார் அமைக்கத் துணிந்துள்ள மைனரிட்டி மந்திரிசபைக்கு ஆதரவு அளிக்கும் அங்கத்தினர்களின் எண்ணிக்கை பெரும் மூடுமந்திரமாக வைக்கப்பட்டு வருகிறது. பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஆச்சாரியார் அதைப்பற்றி நான் தற்சமயம் கவலைப்படத் தேவையில்லை என்று கூறியதின் கருத்தென்ன?

புதிய சட்டசபையை கூட்டினுல்தானே மந்திரிசபையின் [illegible]டவாளம் வெளிப்படும், [illegible]பாயமிருக்கும், சட்டசபையைக் கூட்டாமல் தள்ளிப் போட்டுவிட்டால் மந்திரி சபைக்கு ஆதரவு இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன, யாருக்கும் பொருப்பில்லை யல்லவா? ஆச்சாரியாரை கவுன்சிலுக்கு நியமனம் செய்த, மைனுரிட்டி காங்கிரஸ் கட்சியை மந்திரிசபை அமைக்க அழைத்த மலைவிழுங்கி மகாதேவனுக்கு சட்டசபையை கூட்டாமல் ஒத்திப்போடுவது என்ன பிரமாதமா?

சட்டசபையை ஒத்திப் போட்டுவிட்டு, மைனுரிட்டியை மெஜாரிட்டி [illegible] மாயா[illegible] ஜாலத்தை சாதிக்கத் திட்டமா? இன்னும் பல மாணிக்கவேல் நாயக்கர்களை தேடிப்பிடிக்க அவகாசம் கிடைக்கும் என்ற எண்ணமா? ஆத்திரமூட்டி அடக்குமுறை மூலம் பலரை அகற்றுவதற்கு அவகாசம் கிடைக்கும் என்றபகற்கனவா? ஆச்சாரியார் மந்திரி சபையை அசைக்க முடியாது என்ற அபிப்பிராயத்தை சிருஷ்டித்து ஊசலாடும் ஒரு சிலரையும் [illegible]ன் பக்கம் சாய்த்து சரிக்கட்[illegible]க் கொள்ளலாம் என்று எண்ணமா?

[illegible] உடனே புதிய சட்டசபையை கூட்டாமல் இருப்பதற்கு என்ன நியாயம் தான் கற்பிக்க முடியும்? மந்திரிகள் தோற்ற பிறகு, தோற்ற பிரதமரின் தலைமையில் காபந்து மந்திரி சபை அமைத்து, அந்த மந்திரிசபை தயாரித்த இடைக்கால பட்ஜெட்டை காலாவதியானசட்டசபையைக்கொண்டு நிறைவேற்றிக்கொண்டு, அந்த பட்ஜெட்டின் அடிப்படையில் தேர்தல் முடிந்து பின்னும் ஆறுமாத காலத்திற்கு ஆட்சி நடப்பது என்பது என்ன ஜனநாயகம் என்று தெரியவில்லை! மந்திரி சபை அமைத்தவுடனேயே திரு-கொச்சியிலும், ஹைதராபாத்திலும் புதிய சட்டசபையை உடனே கூட்டவில்லையா? இங்கு மட்டும் ஏன் தாமதம்?

புதிய சட்ட சபையை உடனே கூட்டாமலிருப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது; புதிய சட்டசபை அங்கத்தினர்களின் உரிமைகளை பறிப்பதாகும்; தேர்தலை ஒரு வெறும் கேலிக் கூத்தாக்குவதாகும். புதிய சட்டசபை அங்கத்தினர்கள் கவர்னருக்கு தங்கள் ஆட்சேபனைகளை உடன் பொழிய வேண்டும்.

'ஆச்சாரியார் மந்திரி சபை ஒழிக' எனும் கோஷம் சென்னை ராஜ்யம் எங்கும் விண்ணதிரக் கேட்கிறது இம்மாதம் 6-ம் தேதி லட்சத்திற்கு மேல் ஜனத்திரள் சென்னைக் கடற்கரையில் கூடி ஆச்சாரியாருக்கு கவர்னர் அழைப்பு அனுப்பியதை ஆட்சேபித்தது; அன்று தமிழ்-நாடு பூராவும் இக்கிளர்ச்சி காட்டுத்தீ போல் பரவியது; கிளர்ந்தெழும் மக்கள் சக்தி "புதிய சட்டசபையை உடனே கூட்டுக" என்று கோஷிக்க வேண்டும்; குறிப்பான, ஸ்தூலமான இக்கோரிக்கையின் அடிப்படையில் சர்வஜன ஒற்றுமையை உருவாக்கி, சட்டசபையை ஜனசக்தி கொண்டு திறக்க வேண்டும்; சட்டசபையின் சாவி ஜனங்கள் கையிலிருக்கிறது; மக்கள் முன்னுல் வருவதற்கு அஞ்சும் ஆச்சாரியார் சட்டசபைக்கு முன், மக்களின் பிரதிநிதிகளுக்கு முன் வருவதற்கும் அஞ்சுகிருர்.

இன்று சட்டசபைக்கு முன்னுல் எண்ணிறந்த பிரச்னைகள் உள்ளன. ராஜ்யம் முழுவதும் கொந்தளிப்பில் உள்ளது. ராயலசீமாவில் பஞ்சம் மக்கள் லட்சக் கணக்கிலே வெளியேறுகின்றனர், ஆயிரக்கணக்கிலே மடிகின்றனர். ஆங்காங்கு உருப்படியான நிவாரணவேலைகள் செய்யப்படவில்லை. அந்த பிரதேச மக்களின் பிரதிநிதிகள் நெஞ்சு கொதிக்கும் ராயலசீமா நிலையை எடுத்துக் கூறி பரிகார நடவடிக்கைகளை வற்புறுத்த சட்டசபையைக் கூட்டாவிடில் சந்தர்ப்பம் கிடை[illegible]து.

ராஜாவின் காபந்து மந்திரி சபை தயாரித்த பட்ஜெட் ஒரு செயல் முறை நிர்வாக பட்ஜட்டே தவிர பூரண பட்ஜட்டல்ல. இப்போதே தேர்தல் முடிந்து இரண்டரை மாதங்களாயின. இன்னுமிரண்டு மாதங்கள் சென்னை ராஜ்யத்தின் கதி இவ்வாறு அனுமத்தாக, எம்முடிவுமின்றி சென்ருல் எத்தகைய நிலையில் முடியும் என கூற முடியாது.

இப்போதேகோவை ஜில்லாவின் பல பகுதிகளில் பஞ்சம் பரவிக் கொண்டிருக்கிறது. மற்ற ஜில்லா கலெக்டர்களின் மாதாந்திர அறிக்கையிலும் அபாய அறிவிப்புகளே உள்ளன. ராயலசீமா பஞ்சத்தையே, பதவியேற்ற மயக்கத்தில் மறந்து ரேடியோவில் பிரசங்கம் செய்த ஆச்சாரியின் மந்திரிசபை, மக்களை எதிர்நோக்கும் இன்றைய எண்ணிறந்த பிரச்னைகளைப் பற்றி எதுவும் கூருது 'காமிக்' செய்து பத்திரிகை நிருபர்களிடம் தட்டிக்கழித்த ஆச்சாரியின் மந்திரிசபை, இவற்றிற்கான நடவடிக்கைகளில் இறங்காது. தனக்குள்ள இப்பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும் நிர்ப்பந்தத்திலிருந்து நழுவவுமே "சட்டசபை கூடாது" எனும் தந்திரம்.

எனவே நெருக்கடியில் சிக்கியுள்ள சென்னை ராஜ்ய மக்கள் தங்கள் நலவுரிமைகளைக் காண மார்க்கத்தைத் தேடவும், தங்களின் தீர்ப்பு மதிக்கப்படும் முறையிலும் சட்ட சபை கூட்டப்பட வேண்டும் எனும் பெரும் கிளர்ச்சி தமிழ் நாடெங்கும் நடைபெற வேண்டும்.

ஈட்டிமுனை

ஆஷாடபூதி ஆச்சாரியார்!

அண்டங்காக்காய் ஆச்சாரியாருக்கு அரசாங்கம் என்பது சொந்தக்குடும்ப சமாச்சாரம்! ஒருவார்த்தை சொல்லி விட்டார். உடனே அவர் சட்டசபை கவுன்சில் அங்கத்தினர்; அடுத்த நிமிடம் கட்சித் தலைவர்; அதைத் தொடர்ந்து பிரதமர், அவர் சொந்த வீட்டில் கூட இப்படி சொன்னபடி நடக்குமாவென்று நான் கேட்கிறேன்?

ஓடோடி வந்த காரணம்

அஞ்ஞாத வாசம் போன அண்டங்காக்காய் மக்களின் அவல நிலையைக் கண்டு பொறுக்கமாட்டாமல் சேவை செய்ய முன் வந்ததா? ராயலசீமாவில் பஞ்சம் என்று கேட்டு திடுக்கிட்டு உடன் சேவை செய்ய முன் வந்ததா? அடக்குமுறையில் மக்கள் அவதிப்பட்டார்கள் அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்கு முன்வந்ததா? இல்லவே இல்லை; ஜனவிரோத காங்கிரஸ் ஆட்சிக்கு ஆபத்து வந்து விட்டது என்று செய்தி கேட்டவுடன் தான் அஞ்ஞாத வாசத்தை விட்டு விட்டு ஓடோடியும் வந்திருக்கிறது; தேர்தலில் மக்கள் அளித்துள்ள காங்கிரஸ்—எதிர்ப்பு தீர்ப்பை மீறி ஜனவிரோத ஆட்சியை காத்துக்கொடுக்க வந்திருக்கிறது!

ஊருக்கு உபதேசி

அரசாங்கமே அவர்கள் குடும்பச் சொத்து என்ருல், பின் அகில இந்திய ரேடியோவை பற்றி கேட்க வேண்டுமா? அதில் அண்டங்காக்காய் திருவாய் மலர்ந்தருளியதில் ஆச்சரிய மென்ன? கடற்கரையில் கூட்டம்போட அதற்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. காங்கிரஸுக்கு மெஜாரிட்டியில்லை; ஆச்சாரியார் அமைத்துள்ள மந்திரி சபைக்கு இன்றைக்கும் மெஜாரிட்டி யில்லை; இன்றும் கூட ஐ. ஜ. முன்னணிக்குள்ள ஆதாரவைக் காட்டிலும் காக்காய்களின் எண்ணிக்கை குறைவுதான். இதை எண்ணி ஹிந்து பத்[illegible] [illegible]கிறது. இவ்வாறு அநியாயமாக, அவர்கள் அரசியல் சட்டத்திற்கே நேர்மாருக, மக்கள் முடிவுக்கு முற்றிலும் முரணுக எப்படி மந்திரிசபை அமைக்கலாம் என்பதே பொதுஜனங்கள் கேட்கும் கேள்வி அண்டங்காக்காயின் ரேடியோ பிரசங்கத்தில் இதற்கு பதில்கூற வேண்டாமா? அதுதான் இல்லை. அரசியல் சட்டப்படி தேர்தலில் பங்கு கொண்டு, வெற்றிபெற்று, காங்கிரஸைத் தேர்தலில் தோற்கடித்து, மந்திரிகளை மண் கவ்வ வைத்து, சமாதானமான முறையில் ஜனநாயக கூட்டாட்சி அமைக்க முன்வந்தால் அதைத் தடுப்பதற்கு ஒழுங்கீனமான முறைகளை கையாண்டுவிட்டு, ஒழுங்குபற்றி ரேடியோமூலம் மக்களுக்கு இந்த ஆஷாடபூதி உபதேசிக்கிருர் சட்டபூர்வமாக அதிகாரத்திற்கு வரவொட்டாமல் அரசாங்க இயந்திரத்தை உபயோகித்துவிட்டு பலாத்கார முறையில் ஏற்படும் சமூக ஏற்பாடுகள் சரியல்லவென்று போதனை செய்யப்புகுந்துள்ளார் இவர்! எங்கள் எஜமானர்கள் சார்பாக நாங்கள் ஆளுவதை எவ்வழியிலும் மாற்றவிடமாட்டோம் என்பதுதான் இதற்கு அர்த்தம்!

* * *

உலுத்தர்கட்கு ஒத்துழைப்பா?

எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டுமாம் இந்த ஆஷாட பூதிக்கு! கம்யூனிஸ்டுகளுடைய ஒத்துழைப்பையும் கோரி நிற்கின்றூராம் சத்யசீலர். சேலம் சிறையிலே சித்ரவதைக்கு உட்பட்டு அங்குலம் அங்குலமாக செத்துக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் சித்ரவதையை சத்தம் செய்யாமல் சகித்துக்கொள்வது அவர் கேட்கும் ஒத்துழைப்பு; சேலம், திருச்சி, ராமனுதபுரம், திருநெல்வேலி சதிவழக்குகளில் பல வருஷங்களாக கொட்டடிகளில் அடைபட்டு, வியாதியுற்று, வெளியில் வந்தாலும் தொடர்ந்து பொது ஜன சேவை செய்ய முடியாத உடல் நிலை எய்தியுள்ள நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்டுகள், தங்கள் கஷ்டத்தைப் பற்றி வாய்திறவாமல் இருப்பது அவர் கோரும் ஒத்துழைப்பு; தோழர் எம். வி. சுந்தரம் தமிழ் மக்களுக்கு ஒரு தகவலும் கொடுக்காமல் வாய்பொத்தி சிறையிலேசெத்து மடிவது அவர் கோரும் ஒத்துழைப்பு; உள் நாட்டு மந்திரியாக இருந்துகொண்டு ஹிட்லரிஸ ஆட்சியை நடத்திய 'நேர்மையாளனை' மிலேச்ச பேய்களை மக்கள்மீது ஏவிவிட்டு ஆயிரக்கணக்கில் நமது தாய்மார்களின் கற்பை அழித்த காதகன், சொத்துக்களை சூறையாடி, ஊர் ஊராக ராணுவ முகாம் அமைத்த அரக்கன், ஒன்று மறியாத அப்பாவியைப்போல், துரும்பையும் திருப்பிக்கொண்டு வரும் ஆஷாடபூதி வேஷம் போட்டுக்கொண்டு, கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்பைக் கோருகிருர். அனுபவித்த சொல்லொணு கஷ்டத்தை அவர் கிண்டல் செய்கிருர். விளையாட்டுப் பேசுகிருர். சர்வநாசம் புரிந்த தைமூர், தாய்க்குத் தலை வணங்கினுன். ஆனுல் இந்த தமிழ் நாட்டுத் தைமூர், துன்புற்ற தாயையும் எள்ளி நகையாடி ஏளனம் செய்கிருர். ஒத்துழைப்பு என்று கேலி பேசுகிருர்!

* * *

ஏமாற்ற முடியாது

இந்நாட்டை என்றென்றும் அடிமைக் காலனியாக வைத்திருக்க விரும்பும் அமெரிக்க ஏகாதிபத்தியம், நாட்டின் தொழில் வளர்ச்சியை விரும்பவில்லை; எங்கு இந்நாடு தன் ஏகாதிபத்ய பிடிப்பிலிருந்து நழுவி விடுமோ என்று ஒவ்வொரு விநாடியும் ஏங்கிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், நாட்டின் தொழில் வளர்ச்சியை விரும்பவில்லை; ஏகாதிபத்தியங்க[illegible] நா[illegible] தொழில் வளர்ச்சியை எதிர்க்கின்றன; உறுதியாகத் தடுத்து வருகின்றன தொழில் வளர்ச்சியைப் புறக்கணிக்க அமெரிக்காவின் நான்கு அம்சத் திட்டம் விவசாய அபிவிருத்தி என்று வாய் கிழியப் பேசுகிறது; பிரிட்டிஷ் கொளும்புத் திட்டம் விவசாய அபிவிருத்தியை அஸ்திவாரம் என்கிறது; எஜமானர் இஷ்டப்படி என்று நேருவின் ஐந்தாண்டுத் திட்டமும், விவசாய அபிவிருத்தியை முக்கியப்படுத்துகிறது. அண்டங்காக்காய் ஆச்சாரியாரின் மூலமந்திரமும் விவசாயமே! விவசாயம் என்ருல் விவசாய சீர்திருத்தம் என்று எண்ணிவிடாதீர்கள். உழுபவனுக்கு நிலமளிப்பது என்று கனவிலும் நினைத்து விடாதீர்கள் விவசாயம் நீர்ப்பாசனம் என்று பேசுவது அமெரிக்க கம்பெனிகளுக்குப் பொதுப்பணத்தை எடுத்து விரயம் செய்வதேயாகும்! ஆகவே 1937ல் வேஷ்டி துவைத்த அவரைப் படம் பிடித்து பத்திரிகைகள் பிரசுரித்த இதே ஆஷாடபூதி, வைஸ்ராய் அரண்மனையில் கோதுமை பயிரிட்டு பாரெங்கும் பிரசாரம் செய்வித்த இந்த ஆஷாடபூதி, "குடியானவர்களான" சேதுபதி ராஜா, வெள்ளக்கிணறு, செங்கோட்டைகளுக்கு ராஜாவான பழனிச்சாமி கவுண்டர், கபிலேஸ்வரம் ஜமீந்தார் பட்டாபிராவ்களுடன் கூடி பயிர்த்தொழில் செய்யப் போகிருர்; இந்த பித்தலாட்டங்களுக்கு ஏமாறப்போவது யார்? பள்ளிப்பிள்ளையும் இன்று ஏமாருது!

* * *

ஊழலுக்குக் கைகொடுக்கும் உத்தமர்

அண்டங்காக்காய் பிரசங்கத்தில், பேட்டியில், அவரது ஏடுகளின், ஏவலாளர்களின் பிரசாரத்தில், ஏமாந்துள்ள ஒரு சிலர் எண்ணத்தில், காணப்படும் விஷயம் ஒன்றே ஒன்று தான்! அண்டங்காக்காயின் தலைமையில் திறமையான நிர்வாகம் நடைபெறும் ஒரே விஷயம்தான்!

திறமையான நிர்வாகம் என்ருல் ஊழல் ஒழிந்த நிர்வாகம் என்று அர்த்தமா? இதே ஆஷாடபூதி மத்ய அரசாங்கத்தில் பல்வேறு பதவிகளில், பொறுப்புகளில், அதிகாரத்தில் இருந்தபொழுதுதான் இந்திய அரசாங்கத்தின் ஊழல்கள் நாற்றமெடுத்து வீசின. ஜீப் ஊழல் இவருக்குத் தெரியாதா? ரயில்வே ஊழல் இவருக்குத் தெரியாதா? ரயில்வே ஸ்டோர் ஊழல் இவருக்கு தெரியாதா? பொது ஆடிட் கமிட்டி விசாரணை ரிப்போர்ட் பகிரங்கப் படுத்திய ஊழல்கள் இவருக்குத் தெரியாதா? சென்னை மாகாண மந்திரிகள்மீது வந்த லஞ்சப் புகார்களுக்கும், படுமோசமான நிர்வாக ஊழல்களுக்கும் தலைமைகொடுத்தவர் இந்த ஆஷாடபூதிதான்!

ஊழலை ஒழிப்பவர்தான் பெருமுதலாளிகளுக்கு சலுகை காட்டிய நேர்மையற்ற நடத்தைக்காக மத்ய அரசாங்கத்திலிருந்து ராஜீநாமா செய்துவிட்டு வெளியேறவேண்டி வந்த சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் வீட்டிற்கு காவடி எடுத்தார். மந்திரி சபையில் சேரும்படி மன்ருடினுர். மறுக்கவேதான் மற்றவர்களைத் தேடினுர்.

ஊழல் 'ஒழிக்கும்" மந்திரி சபை ஏற்பட்டிருப்பதினுல்தான், சென்னை ராஜ்யத்தின் முதல் நெம்பர் வியாபாரத் திமிங்கிலம் சர் முத்தையா செட்டியார் மந்திரி சபை[illegible]ய மனமார வாழ்த்தி[illegible]வேற்கிருர்! "[illegible]ழல் ஒழிக்கும்" ஆட்சி யென்பதினுல்தான், ஐக்கிய ஜனநாயக முன்னணி மந்திரிசபை என்றதும் குலை நடுங்கிக் கொண்டிருந்த பெரும் வியாபார வட்டாரங்களில், காக்காய் மந்திரி சபை என்றவுடன் உயிர் வந்து உற்சாக உணர்ச்சி பெருகுகிறது. அதிகார வர்க்கத்திற்கு ஆனந்தம் பொங்குகிறது.

ஊழல் ஒழிப்பதில் அல்ல அவர் நிர்வாகத் திறமை காட்டப்போவது! கருப்புச் சட்டங்கள் பிறப்பிப்பதில் நிர்வாகத் திறமை! குண்டாந் தடியில் நிர்வாகத் திறமை! வரி வசூலிப்பதில் நிர்வாகத் திறமை! ஏகாதிபத்ய பிரபுத்வ நலன்களை பாதுகாப்பதில் நிர்வாகத் திறமை! அமெரிக்கத் திறமை! ஹிட்லரிஸ திறமை! சுருங்கச் சொன்னுல் சுரண்டலில் திறமையை காட்ட விரும்புகிருர்.

ஆனுல் அண்டங் காக்காய் தமிழ் மக்களை கணக்கிலெடுக்காமல் காரியங்கள் செய்கிறது!

ஹிட்லர் சென்ற வழியை எண்ணிப் பார்க்காமல் காரியங்களைச் செய்கிறது.

சியாங் கே ஷேக்கின் பார்மோசா வாழ்விலிருந்து படிப்பினைகள் பெருமல் காரியங்கள் செய்கிறது.

காக்காய்கள் கலையத்தான் போகின்றன!

கம்யூனிஸ்ட் கட்சி பொதுக்கூட்டம்

மேளியப்பள்ளி, ஏப். 4— கம்யூனிஸ்டு கட்சி சார்பில் 4-4-52 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் வி. ராமசாமி தலைமைவகித்தார். தோழர் கே. சி. சுந்திரம் சேலம் ஜெயிலில் நிர்வாகி ரகுநாதனின் அடக்குமுறையைக் கண்டித்தும், தேசிய இனவாரியாக உள்ள தோழர்களை அவரவாது பிராந்திய ஜெயிலுக்கு மாற்ற வேண்டுமென பேசினுர். தோழர் சே. வி. வி. அர்த்தனுரி காங்கிரஸ் மந்திரிசபையைக் கண்டித்தார்.

விவசாயிகளுக்கு உழவுக் கருவிகள் கன்ட்ரோல் விலைக்குத் தரவேண்டுமெனவும், கிணறுவெட்ட மான்யம் வேண்டுமென்றும், பதனி இறக்குத் தொழிலாளிகளுக்கு 6 மாதமே வேலையாகையால் வேலை தேடித் தரவேண்டுமெனவும் இதில் லைசென்சு முறை ஒழியவேண்டுமெனவும், ஓமக்கட்டுப் புதூருக்கும் மணியனூருக்கும் ரோடுவசதி செய்ய வேண்டுமெனவும், பாலன் மரண தண்டனை ரத்தாகவேண்டுமெனவும், காங்கிரஸ் மந்திரிசபை யமைத்ததைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

உடனே சமாதான உடன்படிக்கை வேண்டும்!

மேலைய வல்லரசுகள் திட்டத்திற்கு

ஜெர்மன் மக்கள் எதிர்ப்பு வலுக்கிறது

யுத்தம் முடிந்து ஏழுவருடங்களாகிவிட்டன. ஆனால் யுத்த பிற்கால பிரச்னைகளில் மிக முக்கிமான ஜெர்மன் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை. பாட்ஸ்டம் முடிவுகளின்படி, ஒரு சுதந்திர ஜனநாயக, சமாதான, ஐக்கிய ஜெர்மனியை ஏற்படுத்த வல்லரசுகளில் சோவியத் யூனியன் மட்டுமே பாடுபட்டுவருகிறது கிழக்கு ஜெர்மனியில் ஹிட்லரின் நாஜிக் கும்பல்களின் விஷப்பல் பிடுங்கப் பட்டுவிட்டது. மக்கள் தமது சொந்த அபிலாஷைப்படி சுதந்திரமாக நடந்துகொள்ள பரிபூரண உத்திரவாதம் ஏற்பட்டதன் விளைவாய், ஜெர்மன் மக்கள் ஜனநாயகக் குடியரசு மலர்ந்துள்ளது.

இதற்கு நேர்மாறாக, மேலைய ஜெர்மனி இன்னமும் அமெரிக்க பிரிட்டிஷ இராணுவ மேலாதிக்கத்தின் கீழ் இருந்துவருகிறது. அங்குள்ள அதேனியர் "சர்க்கார்" வெறும் அமெரிக்க பொம்மைதான். நாஜிஸத்தின் மிச்ச சொச்சங்கள் ஒழிக்கப்படுவதற்குப்பதில் அதற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டுவருகிறது. யுத்தக் குற்றவாளிகளும், ஹிட்லரின் சதிகாரக் கும்பலும் விடுதலை செய்யப்பட்டு, மீண்டும் பொறுப்புள்ள பதவிகளில் அமர்த்தப்பட்டு வருகின்றனர். யுத்தகால ஆயுத உற்பத்தி மீண்டும் தலைதெறிக்கும் வேகத்தில் முடுக்கி விடப்பட்டுள்ளது சுருக்கக் கூறுமிடத்து, அமெரிக்க—பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் சோவியத் யூனியனுக்கும், மக்கள் ஜனநாயக நாடுகளுக்கும் எதிராகத் [illegible] திட்டமிட்டுவரும் யுத்தத்திற்கு [illegible] ஜெர்மனி பிரதான தளமாக மாற்றப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் தலைமையில், நாஜி யுத்த வெறியர்கள் மீண்டும் ஐரோப்பிய மக்களுக்கெதிராக அணிதிரட்டப் படுகின்றனர்.

சாஸ்வதமாக காலனியாக்க சதி

ஆகவே, ஜெர்மன் பிரச்னை என்பது உண்மையில் ஐரோப்பிய சமாதானப் பிரச்னையேயாகும். இதனால் தான் உடனடியாக சுதந்திர, ஜனநாயக, சமாதான, ஐக்கிய ஜெர்மனியை சிருஷ்டித்து அதனுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று சோவியத் யூனியன் கோரி வந்துள்ளது. ஆனால், சமாதானத்தில் சற்றும் நாட்டம் கொண்டில்லாத அமெரிக்க—பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் ஜெர்மனியை சாஸ்வதமாகத் தமது காலனியாக வைத்திருக்க முயற்சிக்கின்றனர். அதனால்தான் ஐக்கிய ஜெர்மனி உருவாவதை அவர்கள் நடைமுறையில் எதிர்க்கின்றனர்; பரிபூரண சுதந்திரத்தின் அடிப்படையில் ஒரு சமாதான பூர்வமான ஜெர்மனி உருவாவதை எதிர்க்கின்றனர். இவ்வருடம் மார்ச் 10-ந் தேதியன்று சோவியத் யூனியன், ஜெர்மன் சமாதான உடன்படிக்கைக்காக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கோரி மேலைய வல்லரசுகளுக்கு அனுப்பிய குறிப்பு நிராகரிக்கப்பட்டது, இவ்வுண்மையை மீண்டும் ஊர்ஜிதம் செய்கிறது.

சோவியத் குறிப்பு

சோவியத் யூனியன் தனது குறிப்பில் கோரியதென்ன?

முதலில் ஜெர்மெனி இரண்டு பகுதிகளாக பிரித்து வைக்கப்பட்டிருப்பது ரத்து செய்யப்பட்டு, ஐக்கிய, சுதந்திர ஜெர்மனி நிறுவப்பட வேண்டும். சமாதான உடன்படிக்கை கையெழுத்தான ஒரு வருடத்திற்குள் அன்னியத் துருப்புகள் வாபஸாக வேண்டும்.

இரண்டாவதாக, ஜெர்மன் மக்கள் பூராவுக்கும் சகலவித ஜனநாயக உரிமைகளும் உத்திரவாதம் செய்யப்பட வேண்டும்; ஜனநாயகக் கட்சிகள் இயங்க தங்குதடையிருக்கக்கூடாது.

மூன்றாவதாக, ஜனநாயகத்திற்கும், உலக சமாதானப் பராமரிப்புக்கும் விரோதமான ஸ்தாபனங்களுக்குத் தடை விதிக்கவேண்டும்.

நான்காவதாக, சென்ற யுத்தத்தின்போது நாஜி ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்ட எந்த நாட்டிற்கும் எதிராக எந்த விதமான இராணுவக் கூட்டுறவையோ அல்லது ஒத்துழைப்பையோ ஜெர்மனி ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது.

ஐந்தாவதாக, ஜெர்மனியின் சமாதான ரீதியான அபிவிருத்திக்கு எவ்வித தங்கு தடையும் இருக்கக்கூடாது. அதன் அயல் நாட்டு, உள்நாட்டு வியாபாரத்திற்கு எவ்வித முட்டுக்கட்டையும் இருக்கக்கூடாது.

ஆறுவதாக, ஜெர்மனி தனது நாட்டுப் பாதுகாப்பிற்கு அவசியமான தரை, கடல், விமானப் படைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

இவையே [illegible] சோவியத் குறிப்பின் முக்கிய அம்சங்கள். ஐரோப்பிய சமாதானத்திற்கு உத்திரவாதமளிக்க வல்ல திட்டமிது. ஜெர்மன் மக்களின் சுதந்திர அபிலாஷையையும் பூர்த்தி செய்யும் திட்டமிது.

இதை மேலைய வல்லரசுகள் மார்ச் 26-ந் தேதியன்று நிராகரித்து விட்டன; பேச்சுவார்த்தைகள் நடத்தவும் மறுத்துவிட்டன.

அகில ஜெர்மன் தேர்தல்கள் சம்பந்தமாகவும் சோவியத் யூனியனும் கிழக்கு ஜெர்மனியும் கொண்டுவரும் யோசனைகளையும் அமெரிக்கா நிராகரித்து வருகிறது. அமெரிக்க கூலி அதேனியர் கும்பல் கி. ஜெர்மன் சர்க்காருடன் தேர்தல் நடத்துவது பற்றி கூடிப்பேச மறுத்துவருகிறது. ஜெர்மன் தேர்தல் சம்பந்தமாய் ஜெர்மன் மக்களும், இரு பகுதிகளிலுமுள்ள ஜெர்மன் சர்க்கார்களும்தான் முடிவுசெய்ய வேண்டுமென்பதே ஜெர்மன் மக்களின் கோரிக்கை. கிழக்கு ஜெர்மனி கோருவதும் அதுதான். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டளையின்படி அதேனியர் "சர்க்கார்" இந்த நியாயமான கோரிக்கையை நிராகரித்துவருகிறது. அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள ஐ. நா. கமிஷன் ஒன்று ஜெர்மனி தேர்தல் சம்பந்தமாய் விசாரணை செய்யவேண்டுமென்று கோருகிறது. இது அமெரிக்க ஆதிக்கத்தை விஸ்தரிக்கவும் சாசுவதமாக்கவும்தான் பயன்படும்.

ஆனால், மேலைய வல்லரசுகளின் செய்கைக்காக உலகம் பூராவும் பெரும் கண்டனத்தைத் தூண்டி விட்டுள்ளன. பிரிட்டிஷ் ஆளும் கும்பலின் "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையே மேலைய வல்லரசுகளுடைய பதிலின் "சாதுர்யக் குறைவு" பற்றி கவலை தெரிவித்துள்ளது.

மேலைய ஜெர்மன் பத்திரிகைகளின் கண்டனம்

ஜெர்மனிக்குள்ளேயே என்ன நிலைமை? உடனடியாக ஐக்கிய சுதந்திர ஜனநாய ஜெர்மனி வேண்டும் சமாதான உடன்படிக்கை வேண்டும் என்ற இயக்கம், கிழக்கு ஜெர்மனியில் மட்டுமல்ல, மேலைய ஜெர்மனியிலும் காட்டுத் தீ போல் பரவ ஆரம்பித்துள்ளது. தொழிலாளிகள், விவசாயிகள், இதர உழைப்பாளி மக்கள் மட்டுமின்றி முதலாளிகளும், தொழில் அதிபர்களும் கூட மேலைய வல்லரசுகளின் பதிலுக்கு எதிராய் கண்டனம் முழக்கியுள்ளனர்.

உதாரணமாக மேலைய ஜெர்மனியின் தொழிலதிபர்களின் பத்திரிகையான "இண்டஸ்ட்ரீ க்ரியர்" மேலைய வல்லரசுகள், சோவியத் குறிப்புக்கு அளித்துள்ள பதிலைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறது:

"ஜெர்மனி முழுவதும், சுதந்திரமான தேர்தல்கள் நடத்துவதை, விரல்விட்டு எண்ணத்தக்க ஒருசில சோவியத்—விரோதிகளான அமெரிக்கர்கள் நிராகரித்துள்ளதைக் கண்டு நாம் பெரிதும் வியப்புறுகிறோம்"

தென்ஜெர்மனியிலுள்ள மற்றொரு வலதுசாரி பத்திரிகை, மேலைய வல்லரசுகள் சுதந்திர ஜெர்மன் தேர்தல்களைப் பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் போலித்தனமானது என்று குறிப்பிடுகிறது. '......உண்மையில் ஒரு உடன்பாடு ஏற்படுவதற்குத் தடங்கல்களையே, மேலைய வல்லரசுகள் இட்டு வருகின்றன" என்று அது மேலும் குறிப்பிடுகிறது.

"பெஸ்ஸர் குரியர்" என்ற இன்னொரு மேலைய ஜெர்மன் பத்திரிகை "பெடரல் குடியரசில் (மேலைய ஜெர்மனியில்—ஆ-ர்) யுத்த தயாரிப்புகள் செய்வதற்கு ஒரு புறத்தில் ஆதரவு தந்துவிட்டு, மறுபுறத்தில் ஒரு ஐக்கிய ஜெர்மனி தனது பாதுகாப்புக்கு அவசியமான ஆயுதங்களை உற்பத்தி செய்வது சமாதானத்திற்கு ஆபத்து என்று மேலைய வல்லரசுகள் கூறுவது மூன் [illegible] று [illegible] னில் [illegible] லுக்குப்பின் முரணானது" [illegible] எழுதுகிறது.

"எல்லைக் கோட்டின் இருபுறங்களிலுமுள்ள பல லட்சக்கணக்கான ஜெர்மன் மக்கள் ஒன்றுசேர விரும்புகின்றனர். இது மிகவும் முக்கியமான [illegible]......மேலைய வல்லரசுகளின் பதிலுக்குப் பிறகு, நிலைமை மாறவில்லை; இன்னமும் இன்றைய ஜெர்மன் நிலைமையை சமாளிக்க ஜெர்மன் மக்கள் தமது கடமையை நிறைவேற்ற சகலமும் செய்யவேண்டியுள்ளது" என்று "வெல்ட் ஆம் சென்டேக்" என்ற பிரிட்டிஷ் ஆதரவுப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு, ஜெர்மனி பூராவும் மேலைய வல்லரசுகளின் பதிலுக்கு பலத்த எதிர்ப்பு உருவாகியுள்ளதுடன், ஜெர்மன் சமாதான ஒப்பந்தம் உடனடியாக வேண்டும் என்ற சோவியத், கிழக்கு ஜெர்மன் சர்க்கார்களின் கோரிக்கைக்கு ஆதரவாகவும் மக்கள் திரண்டுவருகின்றனர்.

அகில ஜெர்மன் தேர்தலுக்கு பேச்சுவார்த்தைகள் நடத்துக!

மார்ச் மாதக் கடைசியில் மேலைய ஜெர்மன் நகரான முன்ச்சென்-கிளாட்பேக்கில் 1,110 பிரதிநிதிகள், ஒரு மகாநாட்டில் கூடி, ஜெர்மன் சமாதான உடன்படிக்கை மிகவும் துரிதமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று கோரினர். இந்த 1100 பிரதிநிதிகளும் மேலைய ஜெர்மனியின் சகல பகுதி மக்களின் பிரதிநிதிகள் என்பதும் இம்மகாநாடு பல்வேறு அரசியல் அபிப்பிராயங்களைக்கொண்ட 90 மேலைய ஜெர் [illegible] பிரபலஸ்தர்களின் முன் முயற்சியால் கூட்டப்பட்ட [illegible] என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தந்த [illegible] மன [illegible] த்தகம் நடத்த நாங்கள் தயார் [illegible] ஒரு சமாதான உடன்படிக்கைக்காகவும், ஜெர்மன் ஐக்கியத்திற்காகவும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கென, 50பேர்கொண்ட ஒரு கமிட்டியை, மேற்படி மகாநாடு ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தது. ஜெர்மன் மக்களுக்கு ஒரு வேண்டுகோளையும் இம்மகாநாடு விடுத்தது. இவ்வேண்டுகோள், பெடரல் குடியரசு, ஜெர்மன் ஜனநாயக குடியரசு ஆகிய இவ்விரண்டின் சர்க்கார்களுக்கும், பார்லிமெண்டுகளுக்கும் சமர்ப்பிக்கப்படும் என்று ஒரு டெலிபிரஸ் செய்தி அறிவிக்கிறது.

"ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும், சோவியத் யூனியனும், ஜெர்மன் சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு கொடுத்துள்ள யோசனைகள், பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அடிப்படையாக விளங்குகின்றன என்று நாம் கருதுகிறோம். ஆகவே, பெடரல் குடியரசும், அதன் சர்க்காரும், உடனடியாக அகில ஜெர்மன் தேர்தல்கள் நடத்துவதற்காக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவேண்டும் என்று கோருகிறோம்" என்று அவ்வேண்டுகோள் கூறுகிறது.

ஆகவே, இன்று மேலைய வல்லரசுகளின் பதில், அதன் நோக்கத்திற்கு நேர் எதிராக, ஜெர்மன் மக்களை மேலும் ஒன்றுபட்டு, ஐக்கிய ஜெர்மனிக்காகப் போரிடவே தூண்டியுள்ளது. இனி, அதேனியர்களாலும் அவர்களின் எஜமானர்களான அமெரிக்க—பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளாலும், ஜெர்மன் மக்கள் தமது தேசிய ஒற்றுமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் நடத்தும் [illegible] க்க முடியாது [illegible] ல் விரல்? போராட்டத்தை ந[illegible] என்பது உறுதி.

கல்கத்தாவில் கலாச்சார சமாதான மாநாடு

ஏப்ரல் முதல்வாரம் வெற்றிகரமாய் நடைபெற்றது

கல்கத்தா, ஏப். 8—

"யுத்த பிரச்சாரமும் நிறத் திமிரும் இனவெறியும், கல்வியையும் திரைப் படங்களையும், ரேடியோ, பத்திரிகைகள் முதலிய சாதனங்களையும் துஷ்பிரயோகம் செய்து தேசங்களிடையே குரோதத்தையும்வெறுப்பையும்வளர்க்கின்றன, மனிதனின் புனித இலட்சியங்களை நாசம் செய்து கொடுமை புரிகின்றன," வென்று கல்கத்தாவில் ஏப்ரல் 1-ல் ஆரம்பமாகிய சமாதான கலாச்சார மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கை கூறுகிறது.

மகாநாட்டிற்கு அகில இந்திய சமாதான கவுன்சில் தலைவர் டாக்டர் கிச்சுலு தலைமை வகித்தார். சமாதான இயக்கத்தில் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்குமுள்ள மிகப் பெரிய பொறுப்பை விளக்கி கிருஷன் சந்தர், முல்க் ராஜ் ஆனந்த், பிருதிவிராஜ் கபூர் போன்ற முக்கியஸ்தர்கள் பேசினர். மகாநாட்டில் கவி தாகூர் தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுமார் 800 கலைஞர்கள் பிரதிநிதிகளாக வந்திருந்தனர்

உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதிலும் தேசங்களிடையே நட்புறவை விருத்தி செய்வதிலும் மனிதனின் புனிதமான இலட்சியங்களையும் தார்மீக சிறப்புகளையும் வலியுறுத்துவதிலும், பரம்பரையாய் சமாதானமாக வாழ்ந்து வந்துள்ள இந்திய மக்களுக்கு மிக முக்கியமான பொறுப்பு இருக்கிறதென அவ்வறிக்கை கூறுகிறது. அது மேலும் கூறுவதாவது: "பகுத்தறிவின் பலத்தையும் அன்பின் சக்தியையும் பிரயோகிப்பதும், கலாச்சார உறவுகள் மூலம் தேசங்களிடையே அவநம்பிக்கையும் துவேஷத்தையும் அகற்றுவதும், நம்பிக்கையை வளர்த்து துயரத்தையும் பீதியையும் துடைத்தெறிவதும் கலாச்சாரத்தையும் சமாதானத்தையும் நேசிக்கும் அனைவரின் கடமையாகும்."

மகாநாட்டை சீர்குலைக்க முயற்சி பலிக்கவில்லை

எப்ரல் 1லிருந்து 6 வரை மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. இம்மகாநாட்டைச் சீர்குலைக்க அமெரிக்க ஏஜெண்டுகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. இம்மகாநாடு கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சி வேலையென்று ஒருவரும் ஒத்துழைக்கக் கூடாதென்றும் சில சோஷலிஸ்டுகள் பிரசாரம் செய்தனர். மகாநாடு நடைபெறும்பொழுது மகாநாட்டுப் பந்தலுக்கு தீ வைக்கப்பட்டது. ஆனால் மகாநாட்டில் கூடியிருந்தவர்கள் தீயை அணைத்து பந்தலைப் பாதுகாத்தனர். மகாநாடு எதற்கும் அஞ்சாமல் தொடர்ந்து நடைபெற்று வெற்றியடைந்தது.

சோவியத் யூனியன், புதிய சீனம் போன்ற நாடுகளிலிருந்து மகாநாட்டிற்கு பிரதிநிதிகள் வருவதற்கு காங்கிரஸ் சர்க்கார் அனுமதியளிக்கவில்லை. புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளரான ஹோவர்ட் பாஸ்ட்டும் உலகப் பிரசித்திபெற்ற நீக்ரோ பாடகர்பால்ராப்சனும்மகாநாட்டுக்கு வருவதற்கு பாஸ்போர்ட் கிடைக்கவில்லை. எனவே அவர்கள் மகாநாட்டிற்கு வாழ்த்துச் செய்திகளை கிராமபோன் ரிகார்டுகள் மூலம் அனுப்பி வைத்தார்கள். பால் ராப்சனுடைய சமாதான கீதம் ஒலிபரப்பப்பட்ட போது சகலரும் எழுந்து நின்று ஆர்வமுடன் வரவேற்று மரியாதை செய்தனர்.

நாள்தோறும் மகாநாட்டில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள் சிறப்புடனிருந்தன. தினசரி 25,000 மேற்பட்ட மக்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் சமாதான கீதங்களும், நடனங்களும், நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளில் இடம் பெற்றன. கேரளத்தின் கதக்களி நடனம் யாவராலும் போற்றிப் புகழப்பட்டது. மகாராஷ்டிர பாடகர் அமர்ஷேக்கின் பாடல்களும், வங்காள நாடகங்களும், ஆந்திரா, பீகார் சமாதான நாடகங்களும் எல்லோர் மனதையும் கவர்ந்து விட்டன.

எப்ரல் 6-ம் தேதி மாலை பிரம்மாண்டமான ஊர்வலம் நடைபெற்று அதன்பின் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்துடன் மகாநாடு முடிவுற்றது. 10 ஆயிரத்திற்கு அதிகமானவர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஒரு லட்சத்திற்குமேற்பட்ட பொது மக்கள் பொதுக் கூட்டத்தில் திரண்டனர். தலைமை வகித்துப் பேசுகையில் திரு. கிச்சுலு சகல வித அபிப்பிராய வித்தியாச முடையவர்களும் சமாதான இயக்கத்தின் மேடையில் ஒன்றுபட்டுள்ளனரென்றும் இவ்வியக்கம் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திலுள்ள தென்பது வீண் அவதூறு என்றும் விளக்கிப் பேசினார் மூன்றும் உலக யுத்தத்திற்கு நம் நாட்டை ஒரு தளமாக உபயோகித்துக் கொள்வதற்குச்செய்யப்படும் சதியை முறியடிக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். பின்னர் மகாகவி வள்ளத்தோள், பேசும்பொழுது வார்சாவில் நடைபெற்ற சமாதான காங்கிரசுக்குத் தானும் சென்றிருந்ததாகவும், சமாதானஇயக்கம் கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சிஎன்றுசொல்வது பொய்யாகுமென்றும் சமாதான மேடையில் எல்லோரும் ஒன்றுபட்டு வேலைசெய்ய வேண்டுமென்றும் கூறினார்.

—எஸ். நடராஜன்,
இலங்கை பிரதிநிதி.

மக்கள் மன்ற அமைப்புகள்

தஞ்சையில் 30-3-52ல் ஜனநாயக வாலிபர் கழக திறப்பு விழா நடைபெற்றது. மணலி கந்தசாமி சொற்பொழிவாற்றினார். இ. க. தலைவர் தோழர் கோ ஆளவந்தார் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். 12 பேர்களை உறுப்பினராகக் கொண்ட முன்னணிக் கமிட்டி அமைக்கப்பட்டது.

மதிப்புரை

தாய்: ஆசிரியர்: மாக்ஸிம் கார்க்கி: தமிழாக்கம்: ரகுநாதன்; வெளியீடு: ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை—5; பக்கங்கள் 635, விலை 7—8—0

மாக்ஸிம் கார்க்கியின் 'மதர்' என்னும் உலகப் புகழ்பெற்ற நவீனத்தை கோடானு கோடி உள்ளங்களில் குடியேறியிருக்கும் நவீனத்தைப் பூரணப் பொலிவோடு தமிழ் மக்கள் முன் படைத்திருக்கின்றனர் ஸ்டார் பிரசுராலயத்தார் (இதே நூல் 'அன்னை' என்னும் பெயரில், சிறிது சுருங்கிய அளவில், ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் வேறொரு ஸ்தாபனத்தால் வெளியிடப் பெற்றிருப்பதை வாசகர்கள் அறிவர்).

நிலோவ்னா என்னும் தொழில் வர்க்கத்தாய்—இருபது ஆண்டுகளாக ஓயாத வேலையையும், புருஷனின் அடி உதை அட்டகாசங்களைத் தவிர இல்வாழ்வில் வேறொரு சுகத்தையும் காணாத தாய்—தன் மகன் பாவெலின் துணையால் வர்க்க போதம் பெற்று, சுதந்திரத்திற்காகவும், சகோதரத்துவத்திற்காகவும், சத்தியத்திற்காகவும் தலைநிமிர்ந்து போராடுவதை மகோன்னத இதிகாசமாகச் சித்திரித்துள்ளார் மாக்ஸிம் கார்க்கி.

ஒரு பாட்டாளி வர்க்கத் தாயைக் கதாநாயகியாகக் கொண்டு உழைப்பாளி மக்களின் சத்திய ஆவேசத்தை சமத்துவ வேட்கையை யதார்த்த வாதக் கண்ணோட்டத்தோடு இவ்வளவு அழகாகப் படம்பிடித்து காட்டியவர் உலக இலக்கியத்தில் வேறு யாரும் இல்லை. அதனால்தான் 46 ஆண்டுகளுக்கு முன்பு (1906) எழுதப்பெற்ற இந்நூல், இன்றும் உலக மக்களின் சுதந்திர[illegible] போருக்கு ஊக்கம் தருவதாய் அமைந்துள்ளது. உலகத் தொழிலாளி வர்க்கத்தின் இலக்கியப் பொக்கிஷமாய்த் திகழ்கிறது. உலகெங்கணுமுள்ள முற்போக்கு எழுத்தாளர்களின் ஆதர்ச நூலாய் மிளிர்கின்றது.

இந்நூலில் நாம் எத்தனை யெத்தனை அற்புதமான பாத்திரங்களைச் சந்திக்கிறோம். பாவெல், நிலோவ்னா, ஆண்ட்ரீ, நிக்கோலாய், ஈகோர், ரைபின், பியோடார், ஸாஷா, நடாஷா, சோபியா, லட்மில்லா ஒவ்வொன்றும் அடிமைப் புத்தியற்ற, அன்பு மனம் படைத்த மனித குல கௌரவத்திற்காக போராடும் பாத்திரங்கள்! ஜாரின் கொடுங்கோலாட்சியைத் துளிகூட அஞ்சாமல் எதிர்த்து நிற்கும் எஃகு உள்ளம் படைத்த பாத்திரங்கள்! அவர்களின் உள்ளத்தை இதோ காணுங்கள்:

"முடை நாற்றமெடுத்து நாறும் இன்றையக் கேவல வாழ்வுக்கும், எதிர்காலத்தில் ஏற்படப்போகும் மனித குலத்தின் சகோதரத்துவ சாம்ராஜ்யத்திற்கும் இடையே ஒரு பாலம் கட்டவேண்டும்" —ஆன்ட்ரீ

"நாங்கள் தொழிலாளர்கள். சிறு குழந்தைகளின் விளையாட்டுக் கருவிகளிலிருந்து, பிரம்மாண்டமான யந்திர சாதனங்கள் வரை சகலவற்றையும் எங்கள் உழைப்பின் மூலமே நாங்கள் உலகத்துக்குப் படைத்துக் கொடுக்கிறோம். ஆனால், மனித கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் உரிமையைக்கூடப் பறிகொடுத்தவர்களும் நாங்கள்தான். தமது சொந்த நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் எங்களைத் தங்கள் கைக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. ஆனால் தற்போது நாங்கள் எங்களது கைகளிலேயே சகல அதிகாரமும் இருக்க வேண்டும் என்பதற்காக, அந்த அதிகாரத்தை அடையும் அளவுக்கு நாங்கள் சுதந்திரம் பெற விரும்புகிறோம். எங்களது கோஷம் மிகத் தெளிவானது. 'தனிச் சொத்துரிமை ஒழிக!' 'உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் மக்கள் கையில்!' 'உழைப்பது ஒவ்வொருவருக்கும் கடமை!' இவைதாம் எமது கோஷங்கள். இவற்றிலிருந்து நாங்கள் வெறும் கலகக்காரர்கள் அல்லவென்று நீங்கள் கண்டு கொள்ளலாம்!"

—பாவெல்.

"சர்வ தேசங்களிலுமுள்ள சகல தொழிலாளர்களும் நிமிர்ந்து நின்று, 'போதும், போதும்!' இந்த மாதிரியான வாழ்க்கை இனி எங்களுக்குத் தேவையில்லை' என்று கோஷித்து விம்மும் காலமும் வரத்தான் போகிறது! தங்களது பேராசையின் பலத்தைத் தவிர வேறு எந்தவிதமான நிஜ பலத்தையும் பெற்றிராத இன்றைய 'பலசாலிகள்' அன்றைய தினத்தில் அழிக்கப்படுவர்! இந்த உலகம் அவர்களது (பேராசைக்காரர்களது) காலடியை விட்டு நழுவி மறையும்! அவர்களுக்குத் தப்பிப் பிழைக்க எந்த உதவியும், எந்த மார்க்கமும் இருக்கவே இருக்காது!"

—சோபியா

"ஜனங்களே! ஒன்று திரளுங்கள், ஓரணியில் பலத்த மாபெருஞ் சக்தியாகத் திரண்டு நில்லுங்கள்! எதைக் கண்டும் பயப்படாதீர்கள்! நீங்கள் இப்போது வாழ்கின்ற வாழ்வைவிட வேறு எதுவும் கொடுமை வாய்ந்ததாக இருக்கப்போவதில்லை..... அவர்கள் என் ஆவேசத்தை—என் ஆத்ம ஆவேசத்தைக் கொல்லவே முடியாது!... அவர்கள் நம் எண்ணங்களை ரத்தமயமாக்க முடியாது! ரத்த சமுத்திரமே திரண்டு வந்தாலும் சத்தியத்தை மூழ்கடிக்கவே முடியாது!

—நிலோவ்னா (தாய்)

இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாத்திரமும் எளிய, சாதாரண ஜனங்களின் பிரதிநிதிதான். ஆனால் அவர்களிடம் எத்தனை சிறந்த ஆன்மீகச் செல்வம் மறைந்து கிடக்கிறது! எவ்வளவு பரந்த உள்ளம்! எத்தகைய பிரமிக்கத் தகுந்த வீரம்!

சாதாரண மக்களின் சிறப்பியல்புகளுக்கு வரிவடிவம் தந்து, அதன்மூலம் வாழ்வில் இடையறாத நம்பிக்கையையும், பிடிப்பையும், சத்திய வேட்கையையும் மனித குலத்திற்கு ஊட்டிய புரட்சி எழுத்தாளன், புதுமை கலைஞன், முற்போக்கு இலக்கியத்தின் மூலபிதா மாக்ஸிம் கார்க்கி. அவருடைய நூல்களிலெல்லாம் உலக மக்களின் இதயத்தை கவர்ந்தவள் "தாய்"!

"தாயைப் படித்ததின் மூலம் அரசியல் அரிச்சுவடி கற்றவர்கள் உலகில் 'பலர் உளர்' என்கிறார் ஆங்கில மேதை ரால்ப் பாக்ஸ்.

ஆம்; உண்மை! மாக்ஸிம் கார்க்கியின் "தாய்" ஓர் அற்புதப் பிறவி; அபூர்வப் படைப்பு; அன்னை என்ற சொல்லுக்கே புதிய அர்த்தத்தைத் தருகிறாள் அவள்!

தாய்மையின் மகத்துவம் ஒளிவீசுகின்ற இந்த மகத்தான நாவலை அருமையாக மொழிபெயர்த்துள்ள ரகுநாதனையும், அழகாக வெளியிட்டுள்ள ஸ்டார் பிரசுராலயத்தாரையும், 'ஜனசக்தி' மனங்கனிந்து பாராட்டுகிறது. "தாயை வாங்கிப் படியுங்கள்! ஒருவரால் முடியாவிட்டால், பலர்சேர்ந்து வாங்குங்கள்; வாங்க முடியாதவர்களுக்கு வாசிக்கக் கொடுங்கள்; வாசிக்க இயலாதவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்!

தி. க. சி.

ஜி. இ. ஸி. சங்கத்தை அங்கீகரி!

ஜி. இ. ஸி. தொழிலாளர் பொதுக் கூட்டம் 7-4-52 மாலை 6-மணிக்கு நேப்பியர் பார்க்கில் நடைபெற்றது. ஜி. இ. ஸி. தொழிற்சங்கத் தலைவர் டி. தருமன் தலைமை வகிப்பார். ஜி. இ. ஸி. தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளான, சங்க அங்கீகாரம் சம்பள உயர்வு, வசதி, சனிக்கிழமைகளில் முழுச் சம்பளம் ஆகியவற்றை ஆதரித்தும், தொழிலாளிவர்க்க ஐக்கியத்தைப்பற்றியும், தோழர் டி. ஆர். கணேசன் தீனதயாளன், எப். எ. டோனியன், கே. முருகேசன், எம். கே. ரங்கநாதன், எ. கோவிந்தசாமி ஆகியோர் பேசினர்.

தோழர் பாலன் மாண தண்டனையை ரத்துசெய்யக் கோரியும், மானேஜ்மெண்டார் உடனே ஜி. இ. ஸி. தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்றும், கோரிக்கைகளை உடனே கொடுத்தாக வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

★

திருமணத்தின் போது நன்கொடை

சிலையம்பட்டி, எப். 8—

தோழர் காந்திராசனுக்கும் தோழர் ருக்மணி அம்மையாருக்கும் 31-3-52ல் [illegible] நடைபெற்ற திருமணத்தின்போது ஜனசக்தி நிதிக்கு ரூ. 1-1-0ம், பாலன் நிதிக்கு ரூ 1-1-0ம், முற்போக்கு வாலிபர் சங்க நிதிக்கு ரூ. 1-4.0ம் நன்கொடையளித்தனர்.

அற்பாயுள் ஆட்சியது பாப்பா!

1 நெஞ்சங் கொதிக்குதடி பாப்பா—இனி
நித்திரையும் நமக்குண்டோ பாப்பா!
வஞ்சக ராட்சிஒன்று பாப்பா—புழக்கடை
வழியாக வந்திருக்கு பாப்பா!

2 நிலப்பிரபு ஆட்சியடி பாப்பா—அது
நிச்சயம் நமக்கெதிரி பாப்பா!
தலைகொடுத் தேனுமடி பாப்பா—இந்த
'தலைக்கனம்' ஒழிக்கவேணும் பாப்பா!

3 பணமூட்டை ஆட்சியடி பாப்பா—நம்மை
பார்த்து நகைக்குதடி பாப்பா!
குணங்கெட்ட ஆட்சியைத்தான் பாப்பா—பெருங்
குழிவெட்டி புதைக்கவேணும் பாப்பா!

4 பிற்போக்கு ஆட்சியடி பாப்பா—இது
பித்தலாட்ட ஆட்சியேதான் பாப்பா
அற்பாயுள் ஆட்சியிது பாப்பா—இது
அரைக்கணமும் நிலைக்காது பாப்பா!

5 பதவியின் மோகத்தாலே பாப்பா—நீதி
பஞ்செனப் பறந்ததடி பாப்பா!
முதலாளி ஆட்சியிது பாப்பா—நம்மை
முடமாக்க வந்திருக்கு பாப்பா!

6 காக்கைகள் ஆட்சியிதாம் பாப்பா—அதன்
கண்போல் இருக்குமடி பாப்பா?
மூக்கருந்து போகுமடி பாப்பா—அது
மூன்று நாள் நிலைக்காதடி பாப்பா!

7 மக்களை எதிர்த்த தலை பாப்பா?
மண்ணில் இருந்ததிலை பாப்பா!
ஒக்குமோடி தமிழகம் பாப்பா—இந்த
உதிரிகள் ஆட்சியைத்தான் பாப்பா

8 எதிர்ப்பு வலுக்கவேணும் பாப்பா—கிளர்ச்சி
எங்கெங்கும் வேணுமடி பாப்பா!
சதிசெய்த பிற்போக்கை பாப்பா—சரிந்
திடியப் புடைக்கவேணும் பாப்பா!

9 இடதுசாரி கட்சியெலாம் பாப்பா—ஒன்று
இணைந்தொரு அணியிலே பாப்பா
விடநாகம் சாணக்கியந்தை—உடன்
விரட்டி யடிக்கவேணும் பாப்பா!

—க. மாணிக்கவாசகன்.

நெல்லை 2-வது சதிவழக்கு

தோழர்களை ஜாமீனில் விடுதலை செய்க!

நெல்லை, எப். 10—

நெல்லைச் சதி வழக்கில் 97 பேர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. 10 தோழர்கள் கைது செய்யப்படாமலிருந்ததால் கீழ் கோர்ட்டில் 87 தோழர்கள் மீது வழக்கு நடந்தது. ஆரம்ப விசாரணையின் முடிவில் 18 தோழர்கள் ஆரம்ப வழக்கே இல்லை என விடுதலை செய்யப்பட்டு விட்டனர். இருவர் ஹைக்கோர்ட்டால் விடுதலை செய்யப்பட்டனர்.

தற்போது அடிஷனல் ஜில்லா நீதிபதி முன்பு 67 தோழர்கள் மீது 23-3-52 முதல் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. இவர்களில் 48 தோழர்கள் $2\frac{1}{2}$ வருடத்திற்கு மேலாக தொடர்ந்து சிறையில் உள்ளனர். 19 தோழர்கள் ஜாமீனில் இருக்கின்றனர்.

அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணை ஆரம்பித்தபின் இந்த வழக்கில் சம்மந்தப்படுத்தப்பட்டிருந்த தோழர்கள் வி. மீனாட்சிநாதன், அத்துக்குடியைச் சேர்ந்த எஸ். அருணாசலம் சூசைமுத்து, திருநெல்வேலி ராமசாமி முதலியோர் கைது செய்யப்பட்டனர். இன்னும் தோழர் பாலதண்டாயுதம் உட்பட 6 தோழர்கள் கைது செய்யப்படாமலிருக்கின்றனர். ஏற்னெவே கைது செய்யப்பட்டிருக்கும் நான்கு தோழர்கள் மீதும் தனியாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

செஷன்ஸில் முதல் சதிவழக்கு முடிவடைந்த பின் இந்த மேற்கண்ட தோழர்கள்மீது விசாரணை நடத்த வேண்டுமென அவர்கள்மீது ஆரம்ப விசாரணை நிறுத்தப்பட்டுவிட்டது. செஷன்ஸில் முதல் வழக்கு முடிவடைய இன்னும் சில மாதங்களாவது ஆகும். ஏற்கனவே மேற்கண்ட தோழர்களில் ஜாமீனில் விடுவிக்கப் பட்டிருக்கும் தோழர் ராமசாமி தவிர மற்ற மூவரும் 6 மாதங்களுக்கும் மேலாக சிறையில் உள்ளனர். இவர்களில் தோழர் வி. மீனாட்சிநாதன், அருணாசலம் இருவரும் மூல வியாதியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். தோழர் அருணாசலம் உடல்நிலை மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது.

இந்த நிலையில் அவர்கள் வழக்கு ஆரம்பிக்கும்வரை சிறையிலேயே வைத்திருந்தால் அவர்கள் உடல்நிலை இன்னும் அதிகம் பாதிக்கப்படும். விசாரணை ஆரம்பிக்கவும் இன்னும் அதிக நாட்கள் ஆகும்.

ஆகவே, மேற்கண்ட தோழர்களை உடனடியாக ஜாமீனில் விடவேண்டும். திருச்சி போன்ற வழக்குகளில் உள்ள தோழர்கள் அம்மாதிரி ஜாமீனில் விடுவிக்கப் பட்டிருக்கின்றனர். இவர்களை ஜாமீனில் விடுமாறு நெல்லை ஜில்லாவிலுள்ள ஜனநாயக ஸ்தாபனங்கள் இதற்கான கிளர்ச்சியை ஆரம்பிக்க வேண்டுமென்று நெல்லை ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெளிவந்துவிட்டது!

மே தின வரலாறு

சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் போராட்ட தினமாக விளங்கும் மே தினத்தின் வரலாற்றையும், மேதினத்தின் முக்கியத்துவத்தையும் நோக்கத்தையும் பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் முதலியோர் கூறியுள்ள கருத்துக்களையும் தெரிவிக்கும் நூல்.

எழுதியவர்: சமீபத்தில் ட்ரூமன் சர்க்காரால் கைது செய்யப்பட்ட அலெக்ஸாந்தர் ட்ராச்டென்பர்க். மொழிபெயர்ப்பு: ரகுநாதன்

விலை அணா எட்டு

ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி :: சென்னை-5.

வரப்பெற்றோம்

உள்கட்சிப் போராட்டம்: எழுதியவர் லியூ-ஹௌ-சி; வெளியீடு: ஜனசக்தி பிரசுராலயம், ராயப்பேட்டை, சென்னை-14— கிடைக்குமிடம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 199, மவுண்ட்ரோட், சென்னை—2, விலை ரூ. 1-0-0.

இன்றே வயிருறச் சாப்பிட வழியுண்டு: எழுதியவர்: தோழர் பி. சீனிவாசராவ்; வெளியீடு: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், செம்புதாஸ் தெரு, ஜி. டி. சென்னை, கிடைக்குமிடம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-2; விலை 0-4-0

சீனாவில் அற்புதம் கண்டேன்: எழுதியவர்: கே. ஏ. அப்பாஸ்; வெளியீடு: ஜனசக்திப் பிரசுராலயம்; கிடைக்குமிடம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-2; விலை 0-3-0.

குடியரசுக் கோமான்: மாக்ஸிம் கார்க்கி; தமிழாக்கம்: தி. க. சிவசங்கரன்; வெளியீடு: ரவி பிரசுரம், 2/141, பிராட்வே, சென்னை-1; விலை 0-6-0.

கம்யூனிஸ்ட்களுடன் ஐக்கிய அணி ஏன்?—(பிரஜா கட்சியின் விளக்கம்); வெளியீடு: ஜனசக்தி பிரசுராலயம்; கிடைக்குமிடம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை—2, விலை 0-1-6.

தொழிலரசு: தென்னிந்திய ரயில்வே தொழிற்சங்கத்தின் மாதமிருமுறைப் பத்திரிகை (மலர் 13—இதழ் 1); ஆசிரியர் என். கிருஷ்ணசாமி; விபரங்களுக்கு: தொழிலரசு காரியாலயம், பொன்மலை; விலை 0-2-0.

செங்கதிர்:—(மாதம் இருமுறை முற்போக்கு இதழ்) ஆசிரியர்: எஸ். காமராஜ்; 8 பக்கங்கள்; விலை 0-1-0. விபரங்களுக்கு: செங்கதிர் காரியாலயம்; 92, மேல மாசி வீதி, மதுரை.

இனவாழ்வு: (முற்போக்கு வார இதழ்) (மணி 1—ஓசை 9) நிர்வாக ஆசிரியர் கே. பி. முத்து; ஆசிரியர்: சி. வெங்கடாசலம்; 8 பக்கங்கள், விலை 0-1-0.

சாக்கடைச் சமுதாயம்: (கதை (தொகுதி): எழுதியவர்: தமிழ் ஒளி; வெளிமீடு: ரவி பிரசுரம், பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 1

சென்னையில் காங்கிரஸ் தோற்றதேன்? எழுதியவர்: வி. எ. சாரங்கபாணி பிள்ளை, தபால் பெட்டி எண்-4 மன்னார்குடி, விலை 0—6—0.

சோவியத் வர்த்தக சங்கத் தலைவர்) எம். வி. நெஸ்டரோவ் சொற்பொழிவு: தமிழாக்கம்: எஸ். சண்முகம்; 25, வடக்குத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி ஜங்ஷன் விலை 0—2—0.

மாஸ்கோ பொருளாதார மகாநாட்டின் மகத்தான சாதனைகள்

[ஏ. கே. வெங்கடேஷ்]

மாஸ்கோவில் நடைபெறும் பொருளாதார மகாநாடு மகத்தான சாதனைகளுடன் முடிவுறும் தறுவாயில் உள்ளது. மகாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. உடனே யுத்த வெறியர்களின் முகாமிலே குழப்பம். உலகெங்கும் அமைதி நாடும் மக்களிடையே அக்கறையும், உத்வேகமும் ஏற்பட்டது. அதன் பிரதிபலிப்பே மகாநாட்டின் துவக்க நாளன்று காணப்பட்ட வெற்றி, ஏகாதிபத்தியங்களும் அவற்றின் ஆதிக்கத்திலிருந்த இதர முதலாளித்வ அரசுகள், பிற்பட்ட நாடுகள் அனைத்திலும் சிலர் நாசவேலையிலும் ஈடுபட்டனர். பல நாட்டுப் பிரதிநிதிகளுக்கு மாஸ்கோ செல்ல அனுமதி கிடையாது. மக்களின் உண்மையான உள்ளக் கிடக்கையை பிரதிபலிப்பார்கள் இவர்கள். இவர்கள் செல்வது நம் நோக்கத்துக்கு பாதகம் என அவ்வரசுகள் கருதின. குறிப்பாக அத்தகையோர்களுக்கு அனுமதி அளிக்க மறுத்தன.

மக்களின் மகத்தான வெற்றி

இருந்த போதிலும் பிரதிநிதிகள் அனைவரையும் தடை செய்ய இடமில்லை. அந்த அளவுக்கு மாஸ்கோ மகாநாட்டின் வெற்றி, மக்களின் மாபெரும் வெற்றியாகும்.

சுமார் 600 பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. எல்லா நாடுகளுக்கும் இவ்வழைப்புகள் அனுப்பப்பட்டன. அவர்களுடைய அரசியல் கருத்துக்களோ, பொருளாதார அந்தஸ்தில் பேதமோ, இன்றி, முக்யமான தொழில் உற்பத்தியாளர்கள் வர்த்தகர்கள், பேங்கர்கள், பொருளாதார நிபுணர்கள், கூட்டுறவு ஸ்தாபனத் தலைவர்கள், தொழிற் சங்க தலைவர்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகிய அனைத்திற்கும் அனுப்பப்பட்டன.

நம் நாட்டிலிருந்து வால் சந்த் ஹீரா சந்த் போன்ற தொழிலதிபர்கள், ஜே. சி. குமரப்பா போன்ற பொருளாதார நிபுணர்கள் சிலரும் சியான் சந்த் ரானே போன்ற பிரமுகர்களும் சென்றுள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து மியான் இப்திகாருத்தீன், டான் ஆசிரியர் அல்டாப் ஹூசேன், பிரிட்டனிலிருந்து பாய்ட் ஆர் பிரபு போன்ற குறிப்பிடத்தக்க பிரமுகர்கள் சென்றுள்ளனர்.

மகாநாட்டின் நோக்கம்

“பல்வேறு நாடுகள், அமைப்புகளுக்கிடையில் சுமூகமான ஒத்துழைப்பின் மூலமும் தேசங்களுக்கிடையில் பொருளாதார தொடர்புகளை விருத்தி செய்வதன் மூலமும் அந்தந்த மக்களின் வாழ்க்கைத்தரங்கள் உயர வழி, வகைகளைக் காண்பதே” மகாநாட்டின் நோக்கம்.

இம் மகாநாட்டிற்கான தயாரிப்புகளைச் செய்ய அமைக்கப்பட்ட கமிட்டியும் தனது பிப்ரவரி 15ந் தேதிய அறிக்கையில் கூறியுள்ளதாவது:—

“நாடுகளுக்கிடையில் பரஸ்பர வர்த்தக உறவுகளும், உலக வியாபார சக்தியை அதிகரிப்பதுவும் எப்படி தேசிய தொழில்களை வளர்ச்சியடையச் செய்யும்; எவ்வாறு அதிக பேருக்கு வேலையளிக்கும், எங்ஙனம் வாழ்க்கைச் செலவுகளை குறைக்கும்?” எனமகாநாடு ஆராயவிருக்கிறது. நாமும்இந்த ஒளியில் மகாநாடு முடிவுறுந் தறுவாயில் அதன் சாதனைகள் நம்தொழில் வளர்ச்சிக்கும் நலன்களுக்கும் பொதுவாக உலகிற்கும் எவ்வாறு நன்மைபயக்கிறது என்பதை ஆராய்கிறோம்.

எந்தக் கட்டத்திலே கூடுகிறது?

இன்று இரு உலக மார்க்கெட்டுகள் உள்ளன. இவை தனித்தனியானவையாக. தனி அம்சங்கள் கொண்டதாக உள்ளன. ஒன்று ரஷ்யா, சீனா, இதர சுதந்திர மக்கள் குடியரசுகளைக் கொண்ட. மற்றையது அமெரிக்காவின் அதிகப்படியான ஆதிக்கத்தில் உட்பட்டது. சோவியத் யூனியன் இதாவற்றைக் கொண்ட மார்க்கெட் ஜீவனுள்ளதாகவும, சாதாரணமானதாக பரஸ்பரம்,

பலன்தரும் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்நாடுகளின் வர்த்தக அளவு நாளுக்கு நாள் பிரமாண்டமாக அதிகரித்து வருகிறது.

ஏகாதிபத்ய மார்க்கட்டில்....

ஆனால் மறுபுறத்தில் ஏகாதிபத்ய மார்க்கெட்டுகளில் சாதாரண வர்த்தக உறவுகள் சீர்குலைந்துள்ளன. வர்த்தகத்தில் சரிவும் வீழ்ச்சியும், நெருக்கடியும் நாளுக்கு நாள் முற்றி வருகின்றன. நெருக்கடி மேலும் முற்றி வருவதால் சுதந்திர உலக நாடுகளுடன் வர்த்தக உறவு கொண்டுள்ள தனி நாடுகளின் வர்த்தகம் நிலையற்றதாக்கப்படுகிறது. ஏகாதிபத்ய நாடுகளிலும் சரி, மற்ற முதலாளித்வ நாடுகளிலும் சரி பொருளாதார நெருக்கடிகள் முற்றுகின்றன; வேலையின்மை, பட்டினி ஆகியவற்றால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். வர்த்தக திமிங்கிலங்கள் தமக்கேற்பட்டுள்ள இந் நெருக்கடியைத் பின்தங்கிய நம்நாட்டைப்போன்ற நாடுகளின்மேல் திணிக்கின்றன. இதை இன்னும் பத்திரிகைகளில் பார்க்கிறோம். நேற்றும் பார்த்தோம் சரித்திரபூர்வமாக நிலைநின்ற உண்மை இது.

அமெரிக்க எஃகுத் தொழில் நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டங்களும், சோவியத் யூனியனுடன் வர்த்தகம் செய்வோரின் கருப்பு ஜாபிதாவை ட்ரூமன் தயாரிப்பதும், சீனாவிலிருந்து அரிசி நம் நாடு பெற்றதோவில்லையோ, நான் உனக்கு ரப்பர் உற்பத்திக்கு வேண்டிய ‘கார்டன் ப்ளாக்’ அனுப்பமாட்டேன் என அமெரிக்கா அனுப்பி வந்ததை நிறுத்தியதும், இதற்கு அங்குமிங்குமாக எடுத்த சிறந்த உதாரணங்கள்.

யுத்த தயாரிப்பின் விளைவு

ஆனால், ஏகாதிபத்ய மார்க்கெட்டுகளில் நெருக்கடிக்கு பிரதான காரணமாக இன்று உள்ளது. அதன் யுத்த தயாரிப்புகளே. இதன் விளைவாக பொருளாதாரம் ராணுவ பொருளாதாரமாக மாறுகிறது என்பது மட்டுமல்லாமல், அபரிமித யுத்த தயாரிப்பினால் விளையும் கேடுகளை இதர நாடுகள் மீது திணிப்பதாலும் ஒட்டு மொத்தமாக உலகெங்கும் மக்களின் பொருளாதாரம் உருக்குலைகிறது. வாழ்க்கைத்தரம் மோசமாகிறது. எனவேதான் கிழக்கு—மேற்கு நாடுகளுக்கிடையில் உள்ள வர்த்தக பிரச்னை மகாநாட்டில் பெரும் விவாதத்தினைக் கிளப்பியுள்ளது.

பொருளாதார முற்றுகையின் பலன்

யுத்த பிற்காலத்தில் ஏகாதிபத்யவாதிகள் சோவியத் யூனியனையும், சீனாவையும் இதர சுதந்திர நாடுகளையும பொருளாதார முற்றுகையின் மூலம் தனிமைப் படுத்த கனவுகண்டன. ஆனால் அதன் விளைவாக இதர நாடுகளே பாதி[illegible]ப்பட்டன. பிரதானமாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாயிற்று.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் கச்சாப் பொருள் பற்றாக்குறை, விற்பது வாங்குவதில் சிரமங்கள், தனிப்பட்ட தொழில்களில் முடக்கம், வளர்ந்துவரும் வேலையில்லாப் பட்டாளம், விலைவாசி உயர்வு, மக்களின் வாங்கும் சக்தியில் குறைவு அனைத்தும் ஏற்பட்டதைக் கண்டோம். இது யுத்த செலவின் விளைவுமட்டுமல்ல. இதர நாடுகளுடனிருந்த சுமூக வர்த்தக உறவு முறிந்ததின் விளைவுமாகும்.

அமெரிக்க மோட்டார் தொழில் ஸ்தலமான டெட்ராய்ட்டில் 1952 ஜனவரியில் வேலையில்லாதவர் 2 லட்சம் கடந்த ஆண்டு இதே மாத கணக்குப்படி 43 ஆயிரம் பேர்.

பிரிட்[illegible]னில் ஜனவரியில் 4 லட்சம் பேர். [illegible] விரைவில் 10 லட்சமாகவும் உயரல[illegible]ம் எனவும் தொழில் மந்திரி அறிவித்தார்.

பிரான்ஸில் 1946 லிருந்ததைவிட இருமடங்கு அதிகரித்தது

டென்மார்க்கில் 22 சத தொழிலாளர்க்கு வேலையில்லை.

இத்தாலியில் 40 லட்சம்பேர்.

ஜெர்மனியில் 18 லட்சம் பேர் வேலையற்றிருப்பது ஆகியவை சிறந்த உதாரணங்கள். பிரதானமாக பருத்தி பலவகை இயந்திர சாதனங்கள் உலோகம் எஃகுத் தொழில்களில் உள்ளவர்களே பாதிக்கப்படுகின்றனர். இந்த வேலையின்மைக்கு உள்நாட்டில் வாங்கும் சக்தி குறைவு, மார்க்கெட்டில் முடக்கம் யுத்த தயாரிப்புகள் ஆகியவையே காரணங்களாக உள்ளன.

குறிப்பாக பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திய சுரண்டலுக்கும் பிடிப்புக்கும் மக்கள் உள்ளாகியுள்ளனர். தொழில் வளர்ச்சியடைய அவர்கள் அனுமதிப்பது கிடையாது. கனரக தொழில்கள் மற்ற நாடுகளில் வளர்வது தனது ஏகபோக கொள்ளைக்கு ஆபத்தானது எனக் கருதி இயந்திர சாதனங்கள் அனுப்ப ஏகாதிபத்தியங்கள் மறுக்கின்றன. இதன் விளைவாகிய, பின் தங்கிய நாடுகளில் உள்ள மக்கள் நம் போன்றோர் படும் அவதியை விளக்க வேண்டியதில்லை.

வர்த்தக உறவு எனில் சுபிட்சமே

ஆனால் முதலாளித்வ நாடுகளில் தேக்கும் பொருள்களை சோவியத் யூனியன் சீனா போன்ற நாடுகள் பெற்றுக்கொள்ளமுடியும். அவைகள் அபரிமித திட்டமிட்ட தொழில் வளர்ச்சியை அடைந்திருப்பதால் மாற்றாக இந்த நாடுகளுக்குத் தேவையானவற்றை அளிக்க முடியும். உதாரணமாக பின் தங்கிய நாடுகள் எனில் அந்நாடுகளிலிருந்து கச்சாப் பொருள்களையும், அதிகப்படியாக உள்ள உற்பத்திப் பொருள்களையும் பெற்றுக்கொண்டு அந்நாடுகளுக்கு தேவையானவற்றை அனுப்பமுடியும்.

. நம்நாட்டை எடுத்துக்கொண்டால் சணல், புகையிலை, மிளகு போன்றவற்றையும் ஜவுளியையும் பெற்றுக்கொண்டு நமக்கு அரிசி, கோதுமை இயந்திர சாதனங்கள் விவசாய இயந்திரங்கள் ஆகியவற்றை அனுப்ப முடியும். இதன் மூலம் நம் தொழில் வளரவும் விவசாய உற்பத்தி செலவு குறையவும் வழி பிறக்கும் விவசாய உற்பத்தி செலவு குறைந்தால் விவசாயிக்கு வாங்கும் சக்தி அதிகரிக்கும். மார்க்கெட்டில் பொருள்கள் தேங்குகின்றன “மில்லைமூடு” எனும் பிரச்னையில்லை தொழில் வளர்ச்சி ஏற்படுவதும் விவசாய மக்களின் வாங்கும் சக்தி அதிகரிப்பதுமே சுபிட்சத்துக்கு உத்திரவாதம்.

சோவியத் வழி

இந்நிலையில் சோவியத் யூனியன் உலக சமாதானத்தை ஸ்திரப்படுத்தும் முறையிலும் மற்றநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரங்கள் உயர வேண்டும் எனும் முறையிலும் இம் மகாநாட்டைக் கூட்டியது. அரசியல் கருத்துகள் குந்தகம் விளைவிப்பனவாகவும் தங்கு தடையற்ற வர்த்தக மேற்பட முட்டுக்கட்டையாகவும் இருக்க வேண்டாமென எச்சரித்தது.

அந்த முறையில் மகாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் மகாநாடு பற்றி திருப்தி தெரிவித்துள்ளனர். மகாநாட்டிலேயே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. சோவியத் யூனியனும் தன்னிடமுள்ள பொருள்களின் பட்டியலையும் தான் அதற்கு மாற்றாகபெறத் தயாராகவுள்ள பொருள்களையும் விபரமாக நாடுகளின் பெயர்களைக் குறிப்பிட்டே தெளிவாக்கியுள்ளன. ஆசிய நாடுகளுக்கான ஜாபிதாவை ஒருதடவை கூர்ந்து வாசித்தாலே இத்திட்டம் உயர்ந்ததும், சமாதானபூர்வமான நிர்மாண வேலைகளை செய்யவும் உதவும் திட்டம் என நன்கு புலப்படுகிறது.

அரசியல் கிடையாது

ஏகாதிபத்தியவாதிகள் — உலக ஆதிக்க வெறியர்கள்—இதை எதிர்பநியற்கையே. அவர்களுடைய ஆதிக்கக் கனவிலும் சரி, யுத்தவெறியிலும் சரி சோவியத் யூனியனின் இந்த அறிவிப்பு மண்ணை அள்ளிக் கொட்டியுள்ளது. அமெரிக்கா பிரிட்டன் ஆகியவை வர்த்தக ஒப்பந்தம் எனில் நிபந்தனையின் பேரிலேயே ஏற்றுள்ளதை நாம் பார்த்திருக்கிறோம்.

நம் நாடு உணவுக்கு மன்றாடிக் கொண்டிருந்த நேரத்தில் உணவுக்கு மாற்றாக அணுகுண்டு உற்பத்திக்குத் தேவையான பொருள்களைக் கேட்டது அமெரிக்கா. நமக்குவேண்டிய இயந்திர சாதனங்களைத் தர எப்போதும் இசைந்தது கிடையாது.

ஆனால் இன்று சோவியத்யூனியன் தானே முன்வந்து நம் நாட்டின் தேவையை உணர்ந்து இயந்திர சாதனங்களை தருகிறேன். உங்களிடம் உள்ளதை மாற்றாக கொடுங்கள் என்று கேட்கிறது. டாலரில்தான் செலாவணி என அமெரிக்காவைப் போலவோ ஸ்டர்லிங்கில்தான் என பிரிட்டனைப் போன்றோ நெருக்கடியின் காலைவைத்துச் சொல்லவில்லை. அந்தந்த நாட்டு செலாவணி நாணயத்தில் வர்த்தகம் நடத்த நாங்கள் தயார் என சோவியத் வர்த்தக சபை பிரதிநிதி மாஸ்கோ மகாநாட்டில் அறிவித்தார்.

பாகிஸ்தானை எடுத்துக்கொள்வோம் துணிக்காக பாகிஸ்தான் வேற்றுநாட்டை எதிர்நோக்குகிறது இயந்திரத் தொழில் வளர்ச்சியில் நம் நாட்டைவிட தாழ் நிலையிலேயே உள்ளது. விவசாயம் வளர்ச்சியடையாத பத்தாம்பசலி நிலையில். எனவே இந்நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையெய்த தேவையானது, ஆலைகள், இயந்திரங்கள், நவீன விவசாய சாதனங்கள். இதை அளிக்கிறேன் என 8ந் தேதியன்று மகாநாட்டில் சோவியத் பிரதிநிதி அறிவித்தார். மாற்றாக உள்ள கச்சாப்பொருள்களான சணல், எண்ணெய், பருத்தி ஆகியவற்றையே கேட்கிறது.

இந்தோனேஷ்யாவுக்கு இயந்திர சாதனங்கள், போக்குவரத்து சாதனங்கள் அனுப்பவும் மாற்றாக ரப்பரும் தகரமும் பெற்றுக்கொள்ள ரஷ்யா தயார்.

இலங்கைக்கு சில்லரை உபயோகப் பொருள்கள் அனுப்பவும் மாற்றாக எண்ணெயும் ரப்பரும் பெற்றுக் கொள்வது.

பர்மாவுக்கு இயந்திர சாதனங்கள் உரமனுப்பவும் ரப்பர், அரிசி பெற்றுக்கொள்ளவும் தயார்.

தாய்லந்து: காகிதம், துணி, மாற்று ரப்பர், அரிசி

ஆப்கானிஸ்தானம்: இயந்திர சாதனங்கள் துணி இதர மாற்று கம்பளம், கச்சாப்பருத்தி, பட்டு.

இரான்: இயந்திர சாதனங்கள் காகிதம், துணி இதர, மாற்று அரிசி, பருத்தி, பக்குவம் செய்த பழவகைகள்.

எகிப்து: இதர தூரகிழக்கு நாடுகளுக்கு இயந்திர சாதனங்களும் உருகும் உலோகங்களும் அனுப்பவும், மாற்றாக பருத்தி, கம்பளம், தோல் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளவும் தயார் என அறிவித்துள்ளது.

ஐரோப்பாவுக்கும் திட்டம்

ஆசியாவுக்கு இத்தகைய சிறந்த திட்டத்தையும் கொடுத்துவிட்டு ஐரோப்பாவுக்கும் சுதந்திர நாடுகள் திட்டத்தையளித்தன. சோவியத் வர்த்தக சபை தலைவர் நெஸ்ட்ரோவ் யோசனை கூறியுள்ளபடி சோவியத்துக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் வர்த்தகம் நடக்குமானல் பிரான்சு, இந்தாலி, மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளில் மக்களுக்குள்ள நெருக்கடி தவிர்க்க உதவும் என்பதுடன் 3 ஆண்டுகளாக வேலையற்றிருக்கும் லட்சக்கணக்கான துறைமுகத் தொழிலாளர்களுக்கு முழுநேர வேலை இருந்துகொண்டே இருக்கும் என்றார் ரஷ்ய தொழிற் சங்க தலைவர் குஸ்நெட்ஸோவ்.

ஸ்தலத்திலேயே பேச்சு வார்த்தை

சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பை நிலைநாட்டுவதில் மகாநாடு கூடிக் கலைவதாக அல்ல உருப்படியாக செயலில் இறங்கியது அங்கேயே பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தனிப்பட்ட தொழிற் பிரமுகர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்த ஒரு கழகம் அமைக்கப்பட்டது, அதன் மூலம் 40 நாடுகளைச் சேர்ந்த 100 தொழில், வர்த்தக பிரமுகர்கள் பேச்சுவார்த்தைகளில் இறங்கியுள்ளனர்.

கி. ஐரோப்பிய குடியரசுகள் கிழக்கு நாடுகளுடன் மொத்தம் 6 ஆயிரம் கோடியிலிருந்து 75 ஆயிரம் கோடிவரை வர்த்தகம் செய்ய தயாரென அறிவித்துள்ளன. சைனா தனக்கு மேற்கு நாடுகளுடன் உள்ள வர்த்தக அளவை 1500கோடி ரூபிளிலிருந்து 1,900 கோடியாக உயர்த்தத் தயார். ரஷ்யா ஆயிரம் கோடியிலிருந்து 1,500 கோடியாக உயர்த்தயுள்ளது. கி. ஐரோப்பா 2,500 கோடியிலிருந்து 3,000 கோடியாகவும் கிழக்கு ஜெர்மனி 1,000 கோடியிலிருந்து 1,200 கோடிக்கும் உயர்த்த முடியுமென அறிவித்துள்ளன.

மூக்கின் மேல் விரல்?

ரஷ்யாவோ தன்னுடைய அயல்நாட்டு வர்த்தகத்தை அடுத்த இரண்டு அல்லது மூன்றாண்டுகளில் இர[illegible] மடங்காக்க முடியுமென அறிவித்துள்ளது. ரஷ்யாவின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் அறியாது இரும்புத் திரையை தமக்குத் தாமே இதுவரை போட்டுக் கொண்டிருந்தவர்கள் தங்கள் மூக்கின் மேல் கை வைக்கத் தான் செய்கிறார்கள்.

இந்திய தொழிலதிபர் வால் சந்த் “இதுவரை ரஷ்யா இவ்வளவு தூரம் அபிவிருத்தி யடைந்துள்ள” தாக தெரியாதெனவும் பார்த்த பின்னரே அறிந்ததாகவும் இந்தியாவுக்குத் தேவை இயந்திர சாதனங்களே எனவும் கூறினர். அதை ரஷ்யாவால் அனுப்ப முடியும் என அறிவித்தது இங்கு சில பல வட்டாரங்களில் திகைப்பை ஊட்டியுள்ளது.

உலகப் பொது நெருக்கடி தீர

எனவே உலகப் பொது நெருக்கடி தீர, பின்தங்கிய நாடுகள் முன்னேற்றமடைய, முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளில் (அமெரிக்கா உள்பட) உள்ள பொருளாதார நெருக்கடி தீரவும் மாஸ்கோ மகாநாடு பெரும் யோசனைகளையும் வழி வகைகளையும் கண்டுள்ளது. இம்முறையில் அது உலக சரித்திரத்தில் குறிப்பிடத் தக்க ஒரு நிகழ்ச்சியே.

சமாதானத்திற்கு ஆக்கம்

இம் மகாநாடு மேற்கண்ட மாபெரும் சாதனையை அடைந்தது மட்டுமல்லாமல் உலக சமாதானத்திற்கான மக்களின் மாபெரும் போராட்டத்திற்கு சக்தியிக்க தளத்தைக் கட்டிக்கொடுத்துள்ளது.

“தேசங்களுக்கிடையில் சுமூகமான, பரஸ்பர, சமத்துவ, பொருளாதார உறவுகளை மேற்கொள்ள” நடவடிக்கை எடுக்கக் வார்சாவில் கூடிய 2வது உலக சமாதான காங்கிரஸ், ஐ நா. வுக்கு விடுத்த 10 அம்ச வேண்டுகோளில் கோரியிருந்தது. அந்த அடிப்படையில் இம் மகாநாடு அதை காரியசாத்யமான தாக்குவதில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளது. இரு நாடுகளுக்கிடையில் உள்ள வர்த்தக உறவுகள் அந்த இருநாடுகளிடையில் சமூக உறவேற்பட, உதவியேற்பட உதவிபுரிகிறது. இங்ஙனம் சர்வதேச நெருக்கடி தீர

(8-ம் பக்கம் பார்க்க)

பர்லின் திரைப்பட விழா

டைரக்டர் சுப்ரமணியத்திற்கு அழைப்பு

இரு தென்னிந்திய நடிகர்களுக்கும் அழைப்பு

விழா படங்களில் 'தியாக பூமி'யும் ஒன்று

பர்லின் ஜூன் 12-லிருந்து 25 வரை நடக்கப்போகும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு வரும்படி டைரெக்டர் கே. சுப்ரமணியத்திற்கு பர்லின் செனட் சபை அழைப்பு அனுப்பியுள்ளது.

இரண்டு பிரபல தென் இந்திய சினிமா நடிகர்களையும் தன்னுடன் பர்லினுக்கு அழைத்து வரும்படி பெர்லின் செனெட் சபை திரு சுப்ரமணியத்தைக் கேட்டிருக்கிறது. இந்த நடிகர்கள் பர்லின் நகரின் விருந்தாளிகளாக இருப்பரென்றும் செனெட் சபை அறிவித்துள்ளது. பர்லின் செனெட் சபையின் அழைப்பிற்கிணங்கி இரண்டு நடிகர்களை தன்னுடன் அழைத்துச் செல்லப் போவதாகவும் ஜூன் 7ம் தேதி வாக்கில் இவர்கள் விமானம் மூலம் பர்லின் நகர் போகக்கூடுமென்றும் டைரக்டர் சுப்ரமணியம் அறிவிக்கிறார்.

திரைப்பட விழா கமிட்டியார் விழாவின்போது காட்டப்போகும் படங்களில் "தியாகபூமி" என்னும் தமிழ்ப் படமும் ஒன்றாகுமென்று தெரிகிறது.

இவ்விழாவில் இந்திய சர்க்காரின் பிலிம்ஸ் டிவிஷனும் பங்கெடுத்துக் கொள்ளுமென்றும் விழா கமிட்டியார் தனக்கு செய்தியனுப்பியுள்ளதாக டைரக்டர் சுப்ரமணியம் அறிவிக்கிறார்.

மாஸ்கோ பொருளாதார மகாநாட்டின் மகத்தான சாதனைகள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அது உதவுகிறது. இத்துறையிலே பரஸ்பரம் இரு நாட்டினர் முன்னேறவும், அவர்கள் தேவைப் பூர்த்திபெறவும் இத்தகைய வர்த்தக உறவுகள் பரஸ்பரம் இரு நாட்டு மக்களுடைய நலன்களும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்படுவதால்.

இத்தகைய உறவுகளை உருவாக்குவதில் பெரிய அளவு மாஸ்கோ மகாநாடு வெற்றிபெற்றுள்ளது. இத்தகைய வர்த்தக உறவுகள் வளர்ச்சியடையுமானால் சர்வதேச நெருக்கடி தீரபெரும் உதவியாகவும் இருக்கும். யுத்த அபாயம் நிரந்தரமாக தவிர்க்கப்பட ஹேதுவாகும். ஆனால் அதே நேரத்தில் மகாநாட்டின் முடிவுகளை அமுலாக்காமல் நாசம் செய்ய யுத்த வெறியர்கள் முயற்சிப்பர். மக்கள் அதற்கு இடமளிக்காத முறையில், மாஸ்கோ மகாநாடு கண்ட முடிவுகள் நடைமுறைக்கு வர ஏதுவாக இருக்கும்பொருட்டு ஐந்து வல்லரசு உடன்படிக்கைக்கான கிளர்ச்சியில் மக்கள் ஈடுபடவேண்டும். சர்வதேச ரீதியில் தேசங்களுக்கிடையில் பரஸ்பரம் சுமுக உறவும், வர்த்தக உறவும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து வளர்வதாகும். எனவே, ஐந்து வல்லரசு உடன்படிக்கைக்கான கிளர்ச்சியும், சுமுகமான பேதமற்ற பொருளாதார வர்த்தக உறவுக்காகவும் பெரும் கிளர்ச்சியை, உலகில் அமைதியை நிலைநிறுத்தவும், வாழ்க்கையில் சுபிட்சத்தை அடையவும், நடத்துவதவசியம்.

நமது பொறுப்பு

குறிப்பாக இந்தியர்களாகிய நமக்கு இதிலே குறிப்பிடத்தக்க பெரும் பங்கு உண்டு சர்வதேச வர்த்தகம் தழைக்க, உலகப் பொது நெருக்கடி தீர, உலகில் அமைதி நிலவ நடத்தும் போராட்டத்தில் நம் பங்கு பிரதானமானது. மிக அவசியமானது.

நேருவின் ஐந்தாண்டு திட்டம், நாட்டை காலனியாக, தொழில் வளர்ச்சியற்றதாக வெள்ளையன் தேர்க்காலில் இறுகக் கட்டி விடுவதாக உள்ளது. 80 சதமான இந்திய வர்த்தகம் ஆங்கிலோ அமெரிக்கர்களுடன். ஊசியிலிருந்து ரயில் என்ஜின்வரை திருவோடு தூக்கும் நிலை நம் நாட்டில் உற்பத்தியானது எனச் சொல்பவையெல்லாம் மிதமானவை விரல்விட்டு எண்ணத்தக்கவை.

விவசாயம் "சேர சோழ பாண்டியர்கள்" வடநாட்டில் குப்தர்கள் காலத்திய நிலையிலே இன்றும் விவசாயியின் வாங்கும் சக்தி நாளுக்கு நாள் குறைகிறது. அவன் 'பாப்பர்!' நாளை பாப்பரிலும் 'பாப்பர்!' நேருவின் ஐந்தாண்டு திட்டம் இதற்கு 'கான்க்கிரீட்' இட்டு உறுதிசெய்வதாக உள்ளது.

எனவே இந்தியாவுக்கும், சோவியத் யூனியனுக்கும், சீனாவுக்கும் இதர சுதந்திர குடியரசுகளுக்கிடையிலும் வர்த்தகம் பெருகுவதொன்றே நம் தொழில் வளரும் வழி. அதற்கான கிளர்ச்சியை ஒரே பரிகாரம் உலக நெருக்கடி தீர இந்தியாவின் பங்கை செலுத்த ஐந்து வல்லரசு ஒப்பந்தத்திற்காக தங்கு தடையுற்ற வர்த்தக உறவுக்கான கிளர்ச்சியை வலுப்படுத்துங்கள்—மாஸ்கோ மகாநாட்டின் முடிவுகளை அமுலாக்க வற்புறுத்துங்கள்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளம் படைத்தோரும், தொழிலாளரும், தோழர் ஸ்ரீ கண்டனின் உயிரைக் காப்பாற்ற நாடெங்கிலும் ஆர்ப்பாட்டங்களும், பொதுக்கூட்டங்களும் நடத்த கேட்டுக்கொண்டார்.

இன்று திருவனந்தபுரம் பிரதான வீதிகளின் வழியாக ஒரு பெரும் ஊர்வலம் சென்று சர்க்கார் காரியாலய வாயிலை அடைந்து தங்கள் தலைவருக்கு மரியாதை தெரிவித்தனர். ஊர்வலத்தில் காங்கிரஸ் தவிர மற்ற கட்சிகளின் தலைவர்களும், தொழிலாளர்களும் எண்ணிறந்த பெண்களும் பங்குகொண்டனர்.

எட்டாவது நாளாகிய இன்று உண்ணாவிரதமுள்ள தோழர் ஸ்ரீ கண்டன் நாயர் மிகவும் பலஹீனமுற்று காணப்படுகிறார்.

பேராசிரியர் ஷாவின் நியமனத்திற்கு

எம். பி. சுப்ரமணியம் எம். எல். ஏ. ஆதரவு

ஆத்தூர், ஏப். 10—

குடியரசு தலைவர் தேர்தலுக்கு பேராசிரியர் கே. டி. ஷாவின் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருப்பது பற்றி கேட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். பேராசிரியர் ஷா அரசியல் நிர்ணய சபையிலும் நம் மக்களின் உண்மை நலன்களுக்காக [illegible] அச்சமின்றி [illegible]" என்று [illegible] போராடியிருக்கிறார் [illegible] எம். பி. சுப்ரமணியம் எம். எல் ஏ அவர்கள் ஒரு அறிக்கையில் கூறுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது: "சென்னை கவர்னர் மேல்சபைக்கு செய்துள்ள நியமனங்கள், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைப் பலப்படுத்தவேண்டுமெனனும் ஒரே நோக்கத்துடனும், நியமிக்கப்படுவார்கள் போதிய தகுதிகளுடையவர்கள்தான் என்பதைப் பற்றி சிறிதும் கவலையின்றியும், செய்யப்பட்டுள்ளதை கவனிக்கும் பொழுது, மாகாணத்திலும் யூனியனிலும் ஒரு கட்சியாளை அரசாங்கத் தலைவராக வைப்பதால் ஏற்படும் தீமைகள் நன்குவிளங்குகின்றன. நம் நாட்டில் ஜனநாயகம் வளரவேண்டுமென்று விரும்பும் சட்டசபை உறுப்பினர்கள் யாவரும் இந்த தீமைகளை உணருவது அவசியமாகும். எனவே இந்திய குடியரசு தலைவர் பதவிக்கு எந்த கட்சியிலும் சேர்ந்திராத ஒருவரை நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

கட்சிப்பற்றால் நிலைதடுமாறி விடாமல் சென்னை சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் பேராசிரியர் ஷாவிற்கு ஆதரவளிக்கவேண்டுமென்று திரு. எம். பி. சுப்ரமணியம் வேண்டிக்கொள்கிறார்.

ஆச்சாரியார் மந்திரிசபை அமைத்ததை எதிர்த்து

ஊர்வலங்கள், கண்டனக் கூட்டங்கள்

மைனாரிட்டி காங்கிரஸ் மந்திரிசபை அமைப்பதை எதிர்த்து 6-4-52ல் நடந்த கூட்டங்கள், ஊர்வலங்கள் பற்றிய செய்திகள் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன. அவற்றைக் கீழே தருகிறோம்.

மன்னார்குடி கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடந்த கண்டன தினக் கூட்டத்தில் தோழர் குப்புசாமி தலைமை வகித்தார். தோழர்கள் பி. வெங்கடேசன், எம். எல் ஏ., டி. டி. வீரப்பெருமான், ஆர். எஸ். ஆர். கோவிந்தராஜுலு ஆகியோர் காங்கிரசின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தினார்கள். "ஐ. மு. மந்திரி சபை வேண்டும்" என்ற கோஷம் முழங்கியது கூட்டத்தில்.

கரூரில் மாலை 5 மணிக்கு கண்டன ஊர்வலம் கிளம்பி 6 மணிக்கு கூட்டத்தில் போய்க் கலந்தது. கம்யூனிஸ்ட், தி க, தி.மு.க.வைச் சேர்ந்த பல தோழர்கள் பேசினார்கள்; பாலன் தூக்கு தண்டனையை நீக்கவேண்டும் என்றும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், அமெரிக்கக் கிருமி யுத்தத்தை எதிர்த்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

பாபிரெட்டிபட்டி

இரவு 8 மணிக்கு பகுத்தறிவு முன்னணி வாசக சாலையில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பி. கந்தசாமி தலைமையில் கண்டனக் கூட்டம் நடந்தது. அமெரிக்கக் கிருமி யுத்த வெறியர்கள் குற்றவாளிக் கூண்டிலேற்றப்பட வேண்டுமெனவும் தீர்மானம்

'ராஜாஜி வேண்டாம்'

பெரியகுளத்தில் ஊர்வலம்

தி. மு. க., கம்யூனிஸ்டு கொடிகளுடன் பல தெருக்கள் வழியாக ஊர்வலம் சென்றது. 'ஐ. மு. சர்க்கார் வேண்டும், ராஜாஜி மந்திரிசபை வேண்டாம், பிரகாசாவே திரும்பிப் போ' என்ற கோஷங்கள் எங்கும் அதிரும்படி ஒலித்தன. தி. மு. க தோழர் வெற்றிச் செல்வன், கம்யூனிஸ்ட் பொன்னையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குச்சனூர்

பிரஜா கட்சி, தி. மு. க இன்னும் இதர முற்போக்குவாதிகள் சார்பில் கண்டன தினம் கொண்டாடப்பட்டது. பெரிய ஊர்வலமும், கூட்டமும் நடந்தது. பிரஜா கட்சி திரு. கே. எஸ். ராமசாமி சேர்வை தலைமை வகித்தார். பல தோழர்கள் பேசினார்கள். கிருமி யுத்தமும் டுனிஷியாவில் பிரஞ்சு அடக்குமுறையும் கண்டிக்கப்பட்டது. பாலன் விடுதலை கோரப்பட்டது.

நாகப்பட்டணம்

நாகை தாலுகா ஆலம்புழையில் நடந்த விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் ராஜாஜி மந்திரி சபையைக் கண்டித்தும், சேலம் சிறை நிர்வாகிகளின் கொடுமைகளையும், அதில் பாராமுகமாயிருக்கும் அரசாங்கத்தைக் கண்டித்தும், சிறை நிர்வாகி ரகுநாதன் மாற்றப்பட வேண்டும் என்றும், பாலனை விடுவிக்க வேண்டுமென்றும், விவசாயிகள் விஷயத்தில் சர்க்காரின் கவனக் குறைவைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

நாகை தாலுகா தேவூரில் விவசாயிகள் சங்கக் கூட்டம் நடந்தபோது பல கிராம விவசாயிகள் கலந்துகொண்டார்கள். ஆச்சாரியார் மந்திரி சபையைக் கண்டித்தும் அரசியல் கைதிகளையும், பாலனையும் விடுவிக்கவேண்டும் என்றும், சேலம் சிறைக்கொடுமைகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

சாத்தூர்

தோழர் காசிராஜன் தலைமையில் நடைபெற்ற தி. க. அங்கத்தினர்கள் கூட்டத்தில் காங்கிரஸ் ஆட்சி திணிக்கப்படுவதைக் கண்டித்தும், தோழர் எம். வி. சுந்தரம் உடனே விடுவிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

நியூரில் 500 பேர் கொண்ட ஊர்வலம்

"ஐ. மு. மந்திரி சபை வேண்டும்" என்று கோஷித்துக் கொண்டு வந்த 500 பேர் கொண்ட விவசாயிகள் ஊர்வலம் இடும்பாவன கோவில் வாசலில் கூடி காங்கிரஸ் மந்திரி சபையைக் கண்டித்தும், தோழர் பாலன் விடுதலை கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

நியூரைத் தொடர்ந்து மற்றொரு பெரும் ஊர்வலம் சீர்காழியில்

சீர்காழி டவுன் பூராவையும் 500 விவசாயிகள் கொண்ட ஊர்வலம் சுற்றிவந்தது. காங்கிரஸ் எதிர்ப்புக் கோஷங்கள் வானைத்தகர்த்தன பின்னர் நடந்த கூட்டத்தில் பாலன் தண்டனை ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், எம். வி. சுந்தரம் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேறின

திண்டிவனம்

நகர முற்போக்காளர், தி. க., தி. மு. க., உ. க., க. க., ஆகியவற்றின் சார்பில் 3-4-52-ல் திரு. வி. கோபால கவுண்டர் தலைமையில் நடந்த கூட்டம் காங்கிரஸ் மந்திரி சபை அமைப்பதைக் கண்டித்தது.

சுந்தரராஜபுரம்

தோழர் கிருஷ்ணன் தலைமையில் நடந்த விவசாயசங்கக் கூட்டத்தில் மைனாரிடி காங்கிரஸ் தில்லுமுல்லுகள் செய்து மந்திரிசபையமைத்திருப்பது கண்டிக்கப்பட்டது.

விஜயமங்கலம்

ஐ. ஐ. மு. சார்பில் 7-4-52-ல் தோழர் கே. செல்லையா தலைமையில் நடந்த கண்டனதினக் கூட்டத்தில் பாலன் விடுதலை செய்யப்பட வேண்டும், சதிவழக்குகள் வாபஸ் வாங்கப்படவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

சிங்கமங்கலம்

நல்லூர் தோழர் எஸ். ஆரோக்கியசாமி தலைமையில் கண்டன தினப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தொழிலாளர், விவசாயி பொது மக்களின் பரிபூரண நம்பிக்கையோடு கூடிய ஆதரவு ஐ. மு.க்கு அதிகரித்து வருகிறது. ஐ. மு அதிகாரத்திற்கு வர பெருங் கிளர்ச்சியிலிறங்க வேண்டும் என தோழர்கள் பலர் பேசினர். பாலன் மரண தண்டனையை ரத்துசெய், சதிவழக்குகளை வாபஸ் வாங்கு என்று பல தீர்மானங்கள் நிறைவேறின.

பாளையங்கோட்டை: பாலையூர் ரேஞ்சு கிசான் சபா ஆதரவில் தோழர் கே. எஸ். மணியம் தலைமையில் நடந்த கண்டன தினக் கூட்டத்தில் பல தோழர்கள், கொள்ளப்புற வழியாக ராஜாஜி வந்ததைக் கண்டித்துப் பேசினார்கள். தோழர் பாலனை விடுதலை செய்ய வேண்டுமென்றும், அமெரிக்க யுத்த வெறியர்கள் கிருமிக்குண்டுகள் போட்டதைக் கண்டித்தும், ஐ. நா. இதில் தலையிட்டு விஷக்கிருமிகளைப்பற்றி புனர்நிர்மாணத்திற்கு உதவவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

மாதவரத்தில் கண்டன தின கூட்டத்திற்கு தொழிலாளர்களும் விவசாயிகளுமாக 300 பேர் திரண்டிருந்தனர். தோழர் சி. கே. மாதவன் தலைமைவகித்தார். ஐ. மு. ஆட்சி அமைக்க வழிவிட வேண்டுமென்றும், பாலன் மரண தண்டனையை ரத்துசெய்ய வேண்டுமெனவும், கிருமி யுத்தத்தைக் கண்டித்தும், சங்கத் தலைவர்கள் எஸ். அழகிரிசாமியை விடுவிக்கக் கோரியும், பஞ்சாயத்து போர்டு தேர்தல் நடத்தவேண்டும், போர்டு நிர்வாகம் சரிவர நடக்கவேண்டும், ஆஸ்பத்திரியொன்று 15000 மக்கள் கொண்ட இப்பகுதிக்கு வேண்டும், சாகுபடிக்குத் தண்ணீர் வசதி வேண்டும், ஸ்தல போலீஸ் இன்ஸ்பெக்டரின் தவறான நடவடிக்கைகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

குடிதாங்கியில் 1000 பேர் கொண்ட கூட்டம்

கிராம வாசிகள் 1000 பேர் கொண்ட பெருங் கூட்டத்தில் ராஜாஜி நியமனம் கண்டிக்கப்பட்டது. தோழர் சி. எ. பாலன் விடுதலை கோரியும், தென்னாப்பிரிக்க, மலேயாவிலுள்ள இந்தியர்களின் அல்லல்களை இந்திய சர்க்கார் தலையிட்டுப் போக்காததை இக் கூட்டம் கண்டித்து பரிகாரம் தேடுமாறு வேண்டுகிறது. தோழர் எஸ். ரங்கசாமி தலைமை வகித்தார்.

கோவையில் பொதுக்கூட்டம்

டவுன் ஹால் மைதானத்தில் தோழர் பி. லக்ஷ்மணன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அப்பு, அய்யாசாமி, சி. பி. கந்தசாமி ஆகியோர் பேசினார்கள்.

ஜனநாயகமற்ற காங்கிரஸ் பிற்போக்காளர் பதவியேற்றதன் காரணமாக மக்கள் பஞ்சத்தாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் சர்வது தவிர வேறு வழியில்லையென்றும், காங்கிரஸை எதிர்த்த எம். எல். ஏ.க்கள் காங்கிரஸில் சேருவது அனுமதிக்கப்படக் கூடாதெனவும், டுனிஷியா மக்கள் போராட்டத்திற்கு ஆதரவாகவும் தீர்மானங்கள் நிறைவேறின.

Edited, Printed & Published by G. Alavandar, At Janasakthi Press, 80-A, Singanna Chetty Street, Chintadripet, Madras-2. REGD. No. M. 5934